இது ரகசியம் அல்ல!

‘சட்டியைப் பார்த்து பானை கறுப்பு என்றதாம்!’ – என்ற மாதிரி இருக்கின்றது ரணில் விக்கிரம சிங்கவைப் பார்த்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிடும் சில கருத்துகள் என்றார் தென்னிலங்கை தமிழ் அரசியல் பிரமுகர் ஒருவர்.

நேற்று பக்கம் 02 »

பக்கங்கள்: 12

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2049 | கார்த்திகை 24 | திங்கட்கிழமை 10.12.2018 | கதிர் 35

# நீதிமன்றத் தீர்ப்பை ஏற்று அரசியல் முடிவெடுப்பேன்

## அடுத்த கட்டம் குறித்து மைத்திரி



கொழும்பு, டிசெம்பர் 10

நீதிமன்றத்தின் தீர்ப்பு எதுவாக இருந்தாலும் அதற்கு மதிப்பளித்து ஏற்றுக்கொள்வதோடு - அந்தத் தீர்ப்புக்கமைய எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பொலனறுவையில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். பக்கம் 11 »

## பிரதமர் செயலகத்திலிருந்து வெளியேறினார் மஹிந்த!

### அலரி மாளிகையை விட்டு வெளியேற ரணிலுக்கு அழுத்தம்

கொழும்பு, டிசெ. 10

பிரதமர் செயலகத்திலிருந்து மஹிந்த ராஜபக்ஷ வெளியேறிவிட்டார் எனக் கூட்டு எதிரணி அறிவித்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் பிரதமராகநியமிக்கப்பட்டமஹிந்தவும், புதிய அமைச்சரவையும்செயற்படுவதற்குமேன்முறையீட்டு பக்கம் 11 »

## ரணிலுடன் இரகசிய ஒப்பந்தமா? ஜே.வி.பி. மீது மஹிந்த பாய்ச்சல்



கொழும்பு, டிசெ. 10

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தனக்குமிடையில்எவ்வித இரகசியக் கொடுக்கல்–வாங்கல்களும் (டீல்) இல்லை என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பக்கம் 11 »

## இலங்கை அரசியல் நிலவரம் குறித்து அமெ. - இந்தியா உயர்மட்டப் பேச்சு



நியூயோர்க், டிசெ. 10

இலங்கையின் தற்போதைய அரசியல் நிலவரங்கள் தொடர்பாக இந்தியாவும், அமெரிக்காவும் உயர்மட்டப் பேச்சுக்களை நடத்தியிருப் பக்கம் 11 »

## ரி.ஐ.டியின் பணிப்பாளராக யாழ்ப்பாணம் எஸ்.எஸ்.பி.



யாழ்ப்பாணம், டிசெ. 10

யாழ்ப்பாண பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ.எஸ்.ஈ. ஜயசுந்தர பயங்கரவாத விசாரணைப் பிரிவின் (ரி.ஐ.டி) பணிப் பக்கம் 11 »

## சாவகச்சேரி இளைஞரை பலியெடுத்த இரணைமடு!

### நேற்று மாலை துயரச் சம்பவம்



கிளிநொச்சி, டிசெ. 10

இரணைமடுக்குளத்தின் வான் பாயும் பகுதிக்குள் குளித்துக்கொண்டிருந்த போது நீரில் இழுத்துச் செல்லப்பட்டு இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

சாவகச்சேரி, மீசாலையைச் சேர்ந்த என். டிலக்சன் (வயது–21) பக்கம் 11 »

## நாட்டைக் குழப்புவோருக்கு எதிராக புதிய சட்டம் தேவை

### கோருகின்றது ஜே.வி.பி.

கொழும்பு, டிசெ. 10

அரசமைப்புச் சட்டத்தை மீறி நாட்டின் ஒழுங்கமைப்பைக் குழப்புபவர்களுக்கு எதிராகப் புதிய சட்டங்கள் கொண்டு வரப்படவேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்தார். பக்கம் 11 »

## ஐ.தே.க. ஆதரவாளர்கள் நேற்று யாழ்ப்பாணத்தில் போராட்டம்




யாழ்ப்பாணம், டிசெ. 10

ஜனநாயகத்தைப் பாதுகாப்போம், தேசிய அரசை அமைப்போம் என்ற கோரிக்கையின் அடிப்படையில் கையெழுத்து வேட்டையும் கவனவீர்ப் பக்கம் 11 »

## மயிரிழையில் தப்பிய சிறுமி!



கிளிநொச்சி, டிசெ. 10

இரணைமடுக் குளத்தின் வான்பாயும் பகுதிக்குள் சென்று பார்வையிட்டுக்கொண்டிருந்த சிறுமி தவறி நீருக்குள் வீழ்ந்த நிலையில் காப்பாற்றப்பட்டு மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார்.

இந்தச் சம்பவம் பக்கம் 11 »

## ஐ.தே.கவின் திட்டத்தை முறியடிக்க மாற்று வியூகம் வகுக்கும் மைத்திரி!

### மஹிந்தவுக்கு மீண்டும் முடி சூட்டுவதிலேயே குறி

கொழும்பு, டிசெ. 10

நாடாளுமன்றத்தைக் கலைக்கும் ஜனாதிபதியின் வர்த்தமானி அறிவிப்புக்கு எதிரான அடிப்படை உரிமை மனுக்கள் மீதான தீர்ப்பு இந்த வாரம் அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், மஹிந்த பக்கம் 11 »

## ஈ.பி.ஆர்.எல்.எவ்., புளொட் கட்சிகள் மக்கள் பேரவையில் தொடரலாம்

### முன்னணியின் கோரிக்கை நிராகரிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், டிசெ. 10

தமிழ் மக்கள் பேரவையில் இருந்து ஈ.பி.ஆர்.எல்.எப். மற்றும் புளொட் அமைப்புக்களை வெளியேற்றவேண்டுமெனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி விடுத்த கோரிக்கையைத் பக்கம் 11 »

## தமிழ் மக்கள் பேரவைக்கென விரைவில் பொதுக் கொள்கை

### நேற்றைய கூட்டத்தில் தீர்மானம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், டிசெ. 10

தமிழ் மக்கள் பேரவைக்குப்பொதுக்கொள்கை ஒன்றை வரையறுத்துச் செயற்படுவதெனப் பேரவையின் நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் பேரவையின் கூட்டம் பேரவையின் இணைத் பக்கம் 02 »

# குழந்தை அரசியலை மீண்டும் கையிலெடுத்தார் மஹிந்தர்

கொழும்பு, டிசெ. 10

தமிழீழவிடுதலைப்புலிகளுக்கு எதிரான போர் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதி முடிவுக்கு கொண்டுவரப்பட்டதையடுத்து – அதற்கு அரசியல் தலைமைத்துவத்தை வழங்கிய மஹிந்த ராஜபக்ஷ சிங்கள மக்கள் மத்தியில் வெற்றி நாயகனாக வலம்வந்தார்.

அதுமட்டுமல்ல சிங்கள, பௌத்த கோட்பாடு களை முன்னிலைப்படுத்தி அரசியல் தீர்மானங்களை எடுத்ததால் அவரை ஒருதரப்பு கடவுளாகக்கூட பார்த்தது. மேலும் சிலர் 'அப்பச்சி' ( அப்பா) என்று அழைத்து மகிழ்ந்தனர். இதனால், தெற்கு அரசியலில் மஹிந்தவின் ஆதிக்கம் கோலோச்சியது.

அரசியல் மற்றும் ஆன்மீக நிகழ்வுகளில் பங்கேற்கசெல்லும் மஹிந்த ராஜபக்ஷக்ஷவுக்கு ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவால் அதிஉச்சபாதுகாப்புவழங்கப்படும். அப்படி இருந்தும் மக்கள் மத்தியில் சென்று, குழந்தைகளைத் தூக்கிக் கொஞ்சிப் பேசும் மஹிந்தவின் அரசியல் அணுகுமுறையே அவரை, அரசியலில்உச்சம்தொடவைத்தது என்றும் கூறலாம்.

இதனால், 2010 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டுவரை நடைபெற்ற அனைத்துவிதமான தேர்தல்களிலும்மஹிந்ததலைமையிலானஅணிவெற்றிவாகைசூடியது.

2014ஆம் ஆண்டுக்கு பிறகு மஹிந்தவின் செல்வாக்குச் சரிய ஆரம்பித்தது. 2015 இல் ராஜபக்ஷ சாம்ராஜ்யம் சரிந்தது. தற்போது சூழ்ச்சிமூலம் மீண்டும் ஆட்சியைப் பிடிக்க மஹிந்த முயற்சியெடுத்தார். இதற்கு மைத்திரியும் கரம் கொடுத்தார்.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே'குழந்தைஅரசியலை' மஹிந்த மீண்டும் கையில் எடுத்துள்ளார். கண்டி தலதாமாளிகைக்கு நேற்று சென்றிருந்த மஹிந்த அங்கு வந்திருந்த மக்களுடன் கலந்துரையாடியதுடன், வழமைபோல் குழந்தைகளையும் தூக்கி கொஞ்சினார். மேலும் பல சிறார்கள் மஹிந்தவின் காலில் விழுந்து ஆசிர்வாதம் பெற்றனர்.

(ஐ)

## மஹிந்தவின் அரசு சட்டவிரோதமானது

மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் சட்டவிரோதமானது எனத் தற்போது வெளிப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் பாட்லி சம்பிக்க ரணவக்க குறிப்பிட்டுள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகசந்திப்பில்கருத்துதெரிவித்தபோதேஅவர்இதனைக்குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்–

அண்மையில் அரசுக்கும், பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவைக்கு எதிராக நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவை பிறப்பித்தது. இதுவரலாற்றில் முதன்முறையாக இடம்பெற்ற சம்பவம்.

அதற்கமைய இன்று அரசு ஒன்று இல்லை. ஆனாலும் சிலர் ஊடகங்களுக்குகருத்துத்தெரிவித்து முன்னர் இருந்த அரசை அமைக்க முயற்சிக்கின்றனர். எனவே நாடாளுமன்றத்திலும், நீதிமன்றத்திலும் மற்றும் மக்களின் நீதிமன்றத்திலும் மஹிந்த ராஜபக்ஷவின் அரசு சட்டவிரோதமானது என நிரூபணமாகியுள்ளது.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரைச் சந்தித்தேன்.

"தன்னுடைய ஐக்கிய தேசியக் கட்சியிலேயே ஜனநாயகத்தை வளர்க்காமல் மறுக்கின்ற ரணில் விக்கிரமசிங்க, நாட்டின் அதிகாரத்தைக் கொடுத்தால் நாட்டில் ஜனநாயகத்தைப் பேணிஇடமளிப்பாரா என்று தனது சுதந்திரக் கட்சியின் கூட்டத்தில் கேள்வி எழுப்பினார் ஜனாதிபத்மைத்திரிபாலசிறிசேனா" என்று சுட்டிக் காட்டினார் அந்தப் பிரமுகர்.

நாட்டின் ஜனாதிபதியாகப் பதவியேற்ற மைத்திரிபால சிறிசேனவிடம் அதன் காரணமாக சுதந்திரக் கட்சித் தலைமைப் பதவியை ஒப்படைத்தார்கள். இன்று சுதந்திரக் கட்சியின் நிலைமை என்ன? கடந்த பொதுத் தேர்தலில் 96 எம்.பிக்களுடன் நாடாளுமன்றம் சென்ற அந்தக் கட்சியில் இப்போது 16 முதல் 20 எம்.பிக்கள் கூட இல்லை. அப்படி என்றால் தனது கட்சியைச் சரியாக நடத்துவதற்கு தலைமைத்துவத்தைக் கொடுப்பதற்கு லாயக்கற்ற மைத்திரியிடம் நாட்டின் தலைமையை விட்டு வைக்கலாமா என்று கேள்வி எழுகின்றது. ஐ.தே.கட்சியில் ஜனநாயகத்துக்கு இடமளிக்காத ரணில் நாட்டில் ஜனநாயகத்துக்கு இடமளிப்பாரா என்று கேள்வி எழுப்ப முற்பட முன்னர் சு.கவின் தலைமைக்கும் நாட்டின் தலைமைக்கும் தான் பொருத்தமானவரா என்று மைத்திரி சிந்திக்கவேண்டும். ரணிலைப்பார்த்து மைத்திரி விமர்சிக்கின்றமை *"சட்டியைப் பார்த்து பானை கறுப்பு என்ற கதை மாதிரித்தான்"*–என்று கொட்டித் தீர்த்தார் அந்த அரசியல் பிரமுகர்.

எனக்கும் அவரின் கருத்துச் சரியானது என்று தோன்றியது. உங்களுக்கு...?

★ ★ ★

தமிழ் மக்கள் பேரவையின் கூட்டம் நேற்று அதன் இணைத் தலைவர்களுள் ஒருவரான முன்னாள்முதலமைச்சர்விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

பேரவையில் இருந்து ஈ.பி.ஆர்.எல்.எவ்., புளொட் போன்றவை வெளியேற்றப்பட வேண்டும் என்று வலியுறுத்தித் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வரைந்த கடிதம், தமிழ்த்தேசியமக்கள்முன்னணிக்கு பதிலடிகொடுத்து ஈ.பி.ஆர்.எல்.எவ்., புளொட் போன்றவை முன்வைத்த புகார் பட்டியல் முதலிய விடயங்களுக்கு முற்றாக முற்றுப்புள்ளி வைக்கும் விதத்தில் ஒரு திட்டவட்ட முடிவை நீதியரசர் விக்னேஸ்வரன் நேற்றுக் கூட்டத்தில் அறிவித்தார் எனத் தெரிகின்றது.

நேற்றைய கூட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னிணியின் முக்கிய உறுப்பினர்கள் பங்கேற்கவில்லை. புளொட் தரப்பிலும் அப்படித்தான்.

யாரையும் வெளியில் விட முடியாது. எல்லோரையும் அரவணைத்துச் செல்வதுதான் சரியான – உசிதமான – யதார்த்தமான – பாதை என்று அறிவித்தாராம் விக்னேஸ்வரன்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இந்த முடிவை ஏற்குமா? அல்லது துள்ளிக் கிளம்புமா? விக்கி ஐயாவுடன் முரண்பட்டு நிற்குமா?

தாம் மட்டுமே 24 கரட் அசல் தங்கம் போல முழு நேர்மையுடன் தமிழ்த் தேசியத்துக்காக அரசியலில் செயற்படுபவர்கள் என்று சுய புராணமும் சுயதம்பட்டமும் அடிக்கும் நிலையிலேயே எப்போதும் அரசியல் பேசும் சைக்கிள்காரருக்கு நீதியரசரின் இந்தத் தீர்ப்பு நிச்சயம் திருப்தி தருவதாக இருக்காது எனபது உறுதி.

அவர்களின் எதிர்வினை எப்படி இருக்கும்? பொறுத்திருந்தான் பார்க்க வேண்டும்.

- மின்னல்

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர்களான முன்னாள் முதலமைச்சர்சீ.வி.விக்கினேஸ்வரன் மற்றும்வைத்திய கலாநிதிலக்ஸ்மன், வசந்தராசா ஆகியோர் தலைமையில் நேற்று மாலை நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தின் முடிவில் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பாக ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் ஊடக சந்திப்பின்போது பேரவையின் உறுப்பினரானக.அருந்தவபாலன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.–

பேரவையின் கடந்த கூட்டங்களில் தமிழ்த் தேசியமக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திகுமார் பொன்னப்பலத்தால் முன்வைக்கப்பட்ட சில விடயங்கள் தொடர்பாக ஆராய்வதற்காக கூட்டப்பட்ட விசேட கூட்டமே இன்றைய கூட்டமாகும்.

கடந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைவாக சம்மந்தப்பட்ட தரப்புகளிடமிருந்து விளக்கங்களும் கோரியதன் அடிப்படையில் அது தொடர்பாக ஆராயப்பட்டு பொது இணக்கப்பாட்டுக்கு ஏகமனதாகச் சபை வந்துள்ளது.

இந்தக் கூட்டத்தில் மேலும் சிலவிடயங்களும் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளன. அதாவது தமிழ் மக்கள் பேரவையில் இருக்கக் கூடிய தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கட்சிகள் இயங்குகின்ற தன்மை தொடர்பாக ஒரு பொதுக் கொள்கையை வரையறுக்கவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

ஏனெனில் ஏற்கனவே அவ்வாறான கொள்கைகள் இல்லாத காரணத்தினால் நடைமுறை சார்ந்த சில பிரச்சினைகள் உருவாகியிருக்கின்றதென்பதை உணர்ந்துகொண்ட பேரவை உறுப்பினர்கள் அவ்வாறான ஒரு கொள்கையை உருவாக்கி எதிர்காலத்தில் இவ்வாறான பிரச்சினைகள்ஏற்படாதவகையில் தமிழ் மக்கள் பேரவையை மிக இறுக்கமான– கட்டுக்கோப்புடன் தமிழ் மக்களுடைய அபிலாசைகளைஅடைவதற்காக முன்கொண்டு செல்வது தொடர்பாக விலாவாரியாகஆராயப்பட்டுள்ளது.

இதற்கமையவே தமிழ் மக்கள் பேரவைக்குப் பொதுக் கொள்கைவரையறுப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மிகவிரைவில் அவ்வாறான கொள்கையைவரைந்துபேரவையில் எல்லோருடையஅங்கீகாரத்தையும் பெற்று அதன் பின்னர் அந்தக் கொள்கையின் அடிப்படையில் செயற்படவேண்டுமென்றும்முடிவு எடுக்கப்பட்டுள்ளது–என்றார்.

(ஐ-07)

# தமிழ் மக்கள் பேரவையில் கட்சிகள் ஒருங்கிணைந்து செயற்படத் தீர்மானம்



கொழும்பு, டிசெ. 10

தமிழ் மக்கள் பேரவையில் இருக்கின்ற கட்சிகள் மற்றும்பொதுஅமைப்புக்கள் எனச் சகலரும் ஒருங்கிணைந்து செயற்படத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் பேரவையின் கூட்டம் நேற்று யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பேரவையின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது. கூட்டத்தின் முடிவில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்கள் பேரவையில் இருந்து எங்கள் கட்சியையும் புளொட் கட்சியையும் வெளியேற்ற வேண்டுமென தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி விடுத்த கோரிக்கைக்கமைய இரண்டு கட்சிகளிடமும் விளக்கங்கள் கோரப்பட்டிருந்தன.

அதற்கமைய இரண்டு கட்சிகளும் தங்களது விளக்கத்தை எழுத்து மூலமாக வழங்கியிருந்தன. அது தொடர்பில் ஆராயப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

அதாவது பேரவைக்குள் ஏற்பட்டிருந்த பிரச்சினைகள் இன்றைய இக் கூட்டத்துடன் முடிவிற்கு வர வேண்டுமென்ற அடிப்படையில் முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

அத்தோடு அனைவரும் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது – என்றார்.

(ஐ)

# ஜனாதிபதி தான்தோன்றித்தனம் ஏற்கமுடியாது என்கிறார் ஹக்கீம்

கொழும்பு, டிசெ. 10

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினது தான்தோன்றித்தனமான செயற்பாடுகளை ஏற்றுக்கொள்ள முடியாது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயற்குழுக் கூட்டம், இன்று (ஞாயிற்றுக்கிழமை) வடமேல் மாகாணசபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில், அண்மைக் காலமாக எமது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னெடுத்துவரும் நடவடிக்கைகள் ஏற்றுக்கொள்ளத்தக்கவையல்ல.

நாட்டில் ஏற்பட்டுள்ள பல அரசியல் குழப்பநிலைகளுக்கு ஜனாதிபதி எடுக்கும் பல முடிவுகளே காரணமாகியுள்ளன. அவரது நடவடிக்கைகள் தான்தோன்றித்தனமாகவும் நாட்டினது நலனைப் பெரிதும் பாதிக்கும் வகையிலும் காணப்படுகின்றன.

இந்நிலையில் ஜனாதிபதி அண்மையில் 19 ஆம் திருத்தம் தொடர்பாக தெரிவித்த கருத்து சர்ச்சைக்குரிய ஒன்றாகும். தற்போது அவர் 19 ஆம் திருத்தத்தினைத் திருத்தப்போவதாக அபாய அறிவிப்பினையும் விடுத்துள்ளார்.

இவ்வாறானகுழப்பமானதும்சர்ச்சைக்குரியதுமானநடவடிக்கைகளை அவர் முன்னெடுப்பதன் மூலம் இதுவரை காலமும் இடம்பெற்ற தவறுகள் அனைத்திற்கும் ஜனாதிபதியே காரணம் என்பது தெளிவாகத் தெரிகின்றது என அவர் மேலும் குறிப்பிட்டார்.

# காணாமற்போனோர் செயலக செயற்பாடு முடக்க நிலையில்

கொழும்பு, டிசெ. 10

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலை காரணமாக காணாமற்போனோர்அலுவலகத்தின்செயற்பாடுகள்குன்றிப்போயுள்ளன.

இதன்காரணமாகக்காணாமற்போனவர்களின்குடும்பங்களுடனான திட்டமிடப்பட்ட கூட்டங்கள் எதுவும் நடத்தப்படவில்லை எனக் காணாமற்போனவர்கள் தொடர்பான அலுவலகத்தின் உறுப்பினர் மிராக் ரஹீம் தெரிவித்தார்.

அத்தோடு காணாமற்போனோர் அலுவலகத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ், கடந்த 2018 ஆம் ஆண்டு மாசி மாதம் மற்றும் அதன் பின்னர் காணாமற்போனவர்களின் குடும்பங்களுடன், குறிப்பாக வடக்கு கிழக்கில் மற்றும் கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன் பின்னர் கடந்த செப்ரெம்பர் மாதம், காணாமற்போனோர் அலுவலகம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு இடைக்காலப் பரிந்துரைகளை கொண்ட இடைக்கால அறிக்கை ஒன்றை வழங்கியது.

இதில், காணாமற்போன ஆட்களைத் தேடுதல் மற்றும் தேடிக் கண்டுபிடித்தல், உரிய இழப்பீட்டு மார்க்கங்களை அறிமுகப்படுத்துதல், அலுவலகத்தின் நடவடிக்கைகளை செயற்படுத்துதல், காணாமற்போன ஆட்கள் பற்றிய பெயர்ப் பட்டியலைத் தயாரித்தல் போன்ற பல்வேறு விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

இதன் பின்னர் நாட்டில் அரசியல் நெருக்கடி நிலை ஏற்பட்ட நிலையில் அதன் பணிகள், செயற்பாடுகள் அனைத்தும் குன்றிப்போயுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஐ)

# சுமந்திரனே காரணம்!

## கடும் கோபத்தில் சுசில்



கொழும்பு, டிசெ. 10

ஐக்கிய தேசியக் கட்சிக்கும், ரணில் விக்கிரம சிங்கவுக்கும் இடையில் இரகசியத் தொடர்பாளராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் செயற்படுகின்றார் என்று சுசில் பிரேமஜயந்த குற்றம் சாட்டியுள்ளார்.

கொழும்பில் நடந்த நிகழ்வு ஒன்றின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் –

கடந்த நவம்பர் மாதம் 7 ஆம் திகதி அரசமைப்பில் திருத்தங்கள் கொண்டுவர ஐக்கிய தேசியக் கட்சி முயற்சி மேற்கொண்டது, ஆனால் அதை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு எதிர்த்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் அந்த ஆவணங்களை மொழி பெயர்த்து 7 ஆம் திகதி காலை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

மேற்கத்திய நாடுகளை திருப்திப்படுத்தவே ஐக்கிய தேசியக் கட்சி இந்த முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

நம்பிக்கையில்லாப் பிரேரணை நடைபெற்ற போது நீதிமன்ற வழக்கை முன்னெடுத்ததும் சுமந்திரனே. கடிதம் வாயிலாக ரணில் அரசுக்கு ஆதரவு தெரிவித்ததும் சுமந்திரனின் முயற்சியே.

இதன் மூலமாக ஐக்கிய தேசியக் கட்சியின் இரகசியத் தொடர்பாளராகச் சுமந்திரன் செயற்படுகின்றார் – என்றார். (ஐ)

# மட்டக்களப்பில் 42 அடி கிறிஸ்மஸ் மரம்



மட்டக்களப்பு, டிசெ. 10

மட்டக்களப்பு – புனித லூர்து மாதா ஆலயத்தில் அமைக்கப்பட்டுள்ள 42 அடி உயரமான கிறிஸ்மஸ் மரம் நேற்று முன்தினம் மாலை ஒளியூட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

ஆலயத்தின் பங்குத்தந்தை அருட்தந்தை லோறன்ஸ் நிக்லஸ் அடிகளார் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

யேசு பாலன் பிறப்பைச் சிறப்பிக்கும் வகையில் மூன்றாவது ஆண்டாகவும் இந்தக் கிறிஸ்மஸ் மரம் அமைக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

காண்போரை வெகுவாக ஈர்க்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள இந்த கிறிஸ்மஸ் மரத்தைப் பெருமளவான மக்கள் கண்டு மகிழ்ந்து வருகின்றனர். (ஐ)

# மஹிந்தவின் ஆசியுடனேயே ரணில் அலரிமாளிகைக்குள்!

மஹிந்த ராஜபக்ஷவின் ஆசியுடனேயே ரணில் விக்கிரமசிங்க அலரிமாளிகையில் தங்கியுள்ளார் என்று பிமல் ரத்னாயக்க எம்.பி. குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஜே.வி.பியின் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முன்தினம் முற்பகல் பத்தரமுல்லையிலுள்ள அந்தக் கட்சி யின் தலைமையகத்தில் நடைபெற்றது. இதில் பங் கேற்று கருத்து வெளியிடுகையிலேயே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

ரணில் உங்களுக்கு எந்தப் பிரச்சினையும் வராது. நீங்கள் அலரிமாளிகையில் தங்கியிருங்கள் என்று மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார் என்று ஐ.தே.க. உறுப்பினர் ஒருவர் எம்மிடம் தெரிவித்தார். எனவே, மஹிந்த ராஜ பக்ஷவின் அனுமதி மற்றும் கட்டளைகளுடனேயே ரணில் விக்கிரமசிங்க அனைத்து பாதுகாப்புகளுடனும் அலரிமாளிகையில் தங்கியுள்ளார்.

ரணிலை ஆதரிப்பதாக எமது கட்சி எங்கும் குறிப்பிடவில்லை. 12 ஆம் திகதி பிரேரணை முன்வைக்கப்படும்போது எமது நிலைப்பாட்டை வெளிப்படையாக அறிலாம் – என்றார். (ஐ)

# பொருளாதாரம் குறித்து அதிக கவனம் வேண்டும்

## பந்துல குணவர்தன கோரிக்கை



நாட்டினது அரசியல் குழப்பநிலையினால் வீழ்ச்சியடைந்து செல்லும் பொருளாதாரம் குறித்து அதிக கவனம் செலுத்தப்படவேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

வஜிராஷ்ரம விகாரையில் நேற்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இடைக்கால அரசுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம்தற்காலிகதடையுத்தரவைப்பிறப்பித்தமையின் காரணமாகப் பொருளாதார நெருக்கடிகள் தீவிரமடைந்துள்ளன.

அவற்றைச் சமாளிப்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக முன்னெடுக்கவேண்டிய தேவை தற்போது காணப்படுகின்றது. அத்துடன், தற்போது நாட்டில் அரசு இல்லாத காரணத்தினால் பாதுகாப்புக் குறித்து பல்வேறு தரப்பினரும் கேள்வியெழுப்பி வருகின்றனர்.

நாட்டின் பாதுகாப்பு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியிடமே காணப்படுகின்றது. வடக்கு – கிழக்கு உள்ளிட்ட முழு நாட்டினதும் பாதுகாப்புத் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது – என்றார். (ஐ)

# சொந்த அண்ணனை கொடூரமாக வெட்டிப் படுகொலை செய்த தம்பி!

கொழும்பு, டிசெ. 10

ஊருபொக்க, ஹீகொட பகுதியில் வயோதிபர் ஒருவர் கொடூரமாக வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை 7.30 மணியளவில் இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் இருவருக்கிடையில் ஏற்பட்ட காணிப் பிரச்சினை காரணமாக இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸாரின் விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

75 வயதுடைய மூத்த சகோதரனே இவ்வாறு தம்பியின் தாக்குதலால் உயிரிழந்துள்ளார்.

கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய நபரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் ஊருபொக்க பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# பொதுத்தேர்தலில் ஐ.தே.கவில் இணைந்து மேர்வின் போட்டி



கொழும்பு, டிசெ. 10

பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிட விரும்புவதாக முன்னாள் அமைச்சரும், மக்கள் சேவைக் கட்சியின் தலைவருமான மேர்வின் சில்வா தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ரணில் விக்கிரமசிங்க சிறந்ததலைவர்.தூரநோக்குடன் செயற்படும் அரசியல்வாதி. எனவே, அவர் தலைமையில் செயற்படுவதற்கு விரும்புகின்றேன். ஐக்கிய தேசியக்கட்சி வாய்ப்பளிக்குமானால் அடுத்த பொதுத் தேர்தலில் எந்தவொரு தொகுதியிலும் போட்டியிடுவதற்கு தயாராகவே இருக்கின்றேன் என்றும் குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் எம்.பியாக – அமைச்சராக இருந்த மேர்வின்சில்வாவுக்குக்கடந்தமுறை போட்டியிடுவதற்கு ஐ.ம.சு.முன்னணி வேட்புமனு வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, ஐ.தே.கவும் வழங்காது என்றே அந்தக் கட்சிக்கு நெருக்கமானவர்கள் தெரிவித்தனர்.

# மூன்று பொலிஸார் விபத்துக்களில் சாவு

கொழும்பு, டிசெ. 10

பதுளை – கோட்டேகொட வைத்தியசாலைக்கு அருகில் இடம்பெற்ற இ.போ.ச. பஸ் மற்றும் மோட்டார் சைக்கிள் விபத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள்கள் இருவர் உயிரிழந்துள்ளனர்.

சம்பவத்தில் பஸ்ஸின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, பதுளை நகருக்கு அருகில் மோட்டார் வாகனமொன்று மின்சாரக் கம்பத்துடன்மோதுண்டுவிபத்துக்குள்ளானதில், அந்த மோட்டார் வாகனச் சாரதியும் அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் உயிரிழந்துள்ளனர். (ஐ)

# வவுணதீவுப் பொலிஸார் படுகொலை குறித்து முன்னேற்றமின்றித் தொடர்கிறது விசாரணை

வவுணதீவில் இரண்டு பொலிஸார் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக, விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த மாதம் 30ஆம் திகதி நடந்த இந்தக் கொலைகள் தொடர்பாக, பொலி ஸார், வட்டக்கச்சியைச் சேர்ந்த இராச நாயகம் சர்வானந்தன் மற்றும் கன்னக் குடாவைச் சேர்ந்த கதிரித்தம்பி இராஜ குமாரன் ஆகிய இரண்டு முன்னாள் போராளிகளைத் தடுத்து வைத்து விசாரித்து வருகின்றனர்.

மாவீரர் நாளை நடத்துவது தொடர்பாக ஏற்பட்ட பிரச்சினைக்கு பழிவாங்கும் நோக்கில் இந்தக் கொலைகள் இடம்பெற்றிருக்கலாம் என்று பொலிஸார் முன்னர் கூறியிருந்தனர்.

எனினும், இந்தக் கொலைகள் தொடர்பான விசாரணைகளில் எந்த முன்னேற்றங்களும் இதுவரை ஏற்படவில்லை என்றும், கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள், பொலிஸாரிடம் இருந்து எடுத்துச் செல்லப்பட்ட கைத்துப்பாக்கிகள் இன்னமும் மீட்கப்படவில்லை என்றும் கூறப்படுகின்றது.

இந்தநிலையில், விடுதலைப்புலிகளின் முன்னாள் போராளிகளுக்கும் இந்தக் கொலையுடன் தொடர்பு இருப்பதற்கான சாத்தியங்களை நிராகரிக்க முடியாது என்று குற்றப்புலனாய்வுப் பிரிவு கூறியுள்ளது. (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## மனித உரிமைகள் தினத்தில் மனக்குமுறல்

இன்று மனித உரிமைகள் தினம்.

இன்றைக்குச் சரியாக எழுபது ஆண்டுகளுக்கு முன்னர் 1948 ஆம் ஆண்டு டிசெம்பர் 10 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபையால் மனித உரிமைகள் சாசனம் அல்லது பேரறிக்கை பிரகடனப்படுத்தப்பட்டமையை ஒட்டி 1950 டிசெம்பர் 10 ஆம் திகதி முதல் இத்தினம் சர்வதேச ரீதியில் 'சர்வதேச மனித உரிமைகள் தினம்' ஆக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

ஒவ்வொரு மனிதனும் தான் வாழ்வதற்கான நியாயமான உரிமைகளை பெறுவதையும் அதேபோல ஏனைய மனிதரை வாழ விடுவதற்கான உரிமையை உணர்த்துவதையும் உறுதிப்படுத்துவதே இந்தப் பிரகடனத்தின் இலக்காகும்.

மனிதர்கள் சுதந்திரத்துக்கு உரியவர்கள், உரிமைகளிலும், கண்ணியத்திலும் கௌரவத்திலும் சமமானவர்கள். இனம், நிறம், பாலினம், மொழி, மதம், அரசியல், நாடு, சமுதாயத் தோன்றல், சொத்து, பிறப்பு அல்லது சமூக அந்தஸ்து போன்ற எந்த வித வேறுபாடுகளும் இன்றி வாழும் உரிமை பெற்றவர்கள் என்பதையும் இப்பிரகடனம் வலியுறுத்தி நிற்கின்றது.

இனம், சாதி, நிறம், சமயம், பால், தேசியம், வயது, உடல் – உள வலு ஆகியவற்றுக்கு அப்பால் ஒவ்வொரு தனிமனிதருக்கும் அடிப்படையான – விட்டுக் கொடுக்க முடியாத– மறுக்க முடியாத – சில உரிமைகள் உள்ளன. இந்த அடிப்படை உரிமைகள் மனிதர்கள் சுதந்திரமாகவும், சுமுகமாகவும், மனமகிழ்வுடனும், கௌரவத்துடனும், மனநிறைவுடனும் வாழ்வதற்கு அவசியமானவை.

இந்த உரிமைகள், சுதந்திரங்கள் பல்வேறு வகைப்பட்டவை.

வாழுவதற்கான உரிமை – சுதந்திரம், உணவுக்கான உரிமை, நீருக்கான உரிமை, கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் அல்லது பேச்சுரிமை, சிந்தனைச் சுதந்திரம், ஊடகச் சுதந்திரம், தகவல் சுதந்திரம், மத சுதந்திரம், அடிமையாகாத உரிமை, சித்திரவதைக்கு உட்படாத உரிமை, தன்னாட்சி உரிமை, ஆட்சியில் பங்கு கொள்ளும் உரிமை, நேர்மையான விசாரணைக்கான உரிமை, நகர்வு சுதந்திரம், ஒன்றுகூடல் சுதந்திரம், குழுமச் சுதந்திரம், கல்வி உரிமை, மொழி உரிமை, பண்பாட்டு உரிமை, சொத்துரிமை, பழக்க வழக்கங்களையும், மரபுகளையும் பின்பற்றும் உரிமை, நீதியான விசாரணைக்கான உரிமை, நீதியை பெறுவதற்கான உரிமை என்று நீண்டு செல்லும் விடயம் இது.

இதைவிடவும் தொழிலாளர் உரிமை, சமூக உரிமை, பெண்ணுரிமை என மேலும் பல உரிமைகள் குறித்தும் நாம் பேசுகிறோம்; அவதானம் செலுத்துகிறோம்; சிந்திக்கின்றோம்; முக்கியத்துவம் கொடுக்கின்றோம்.

இன்றைய சர்வதேச மனித உரிமைகள் தினத்துக்கு மூல காரணமாக அமைந்தது ஐ.நா.பொதுச்சபையால் நிறைவேற்றப்பட்ட உலக மனித உரிமைகள் சான்றுரை எனக் கண்டோம்.

1948 – 1950 ஆம் ஆண்டுகளில் இந்தச் சான்றுரை பட்டயம் உருவாக்கப்பட்டமைக்கு இரண்டாம் உலகப் போரில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களும், மனித குலத்துக்கே ஒவ்வாத அட்டூழியங்களும் ஒரு காரணம் என்பது குறிப்பிடத் தக்கது.

அன்றைய நிலையில் சம்பந்தப்பட்ட தரப்புகளை – மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரக் குற்றங்களை இழைத்த தரப்புகளை – கட்டுப்படுத்தாத ஒரு சான்றுரையாகவோ அல்லது பிரகடனமாகவோ இது இருந்த போதிலும் கூட, தற்போதைய நிலையில், அனைத்துலக மரபு சார்ந்த சட்டத்தின் முக்கிய கூறாக இது கருதப்படுகின்றது. மனித விடுதலை, நீதி, உலக அமைதி ஆகியவற்றுக்கு இது அவசியமானது. தவிர்க்க முடியாதது என்ற எண்ணக் கரு சகல மட்டத்திலும் இன்று பற்றிப் பிடிக்கப்பட்டுள்ளது.

இந்த சான்றுரையை அனைத்து நாடுகளும் புறமொதுக்காமல் கடைப்பிடிக்க வேண்டும் என்று எழுதாத – கட்டுப்படுத்தாத – சட்டங்கள் மற்றும் வழக்காறுகள் மூலம் நாடுகள் கட்டாயப்படுத்தப்படுகின்றன.

இலங்கைத் தீவிலும் ஈழத் தமிழர்களின் உரிமைக்கான அரசியல் போராட்டம் ஆயுத வழிக்குத் திரும்பிய பின்னர், தென்னிலங்கைச் சிங்களம் அதனை அடக்குகின்ற பெயரில் முன்னெடுத்த அட்டூழியங்கள், மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான மோசமான குற்றச்சாட்டுகள் குறித்து எல்லாம் நீதியான சர்வதேசப் பொறிமுறை ஒன்றின் கீழ் அவை விசாரிக்கப்பட வேண்டும், உண்மைகள் கண்டறியப்பட வேண்டும், பொறுப்புக் கூறல் தொடர்ந்து நிலை நிறுத்தப்பட வேண்டும் என்ற சர்வதேச அழுத்தம் வலிமை அடைந்தமை இந்த மனித உரிமைச் சான்றுரையின் அடிப்படையில்தான் என்பது அவதானிக்கத் தக்கதாகும்.

உலகில் மனித உரிமை விவகாரங்களை விசேடமாகக் கையாள்வதற்கான அமைப்பாக ஜெனிவாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸில் பிரதானமானதாக உள்ளது.

இலங்கையில் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், போர்க் குற்றங்கள் போன்றவை குறித்து விசாரிக்கவும், உண்மைகளைக் கண்டறியவும், அக்குற்றங்களை இழைத்தவர்கள் தொடர்பில் பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்தவும், சில முக்கிய தீர்மானங்களை ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸில் எடுத்தது.

இலங்கை அரசுத் தரப்பும் சேர்ந்து கொண்டு வந்த அந்தத் தீர்மானம், அந்தத் தீர்மான வாசகங்களை நடைமுறைப்படுத்துவதற்கு மேலும் இரண்டு வருடகாலம் இலங்கைக்கு வழங்கி, முன்னெடுக்கப்பட அடுத்த தீர்மானம் எல்லாமே காலாவதியாகும் கட்டத்தை அடைந்துள்ளன.

ஆனால், பாதிக்கப்பட்ட தமிழ் மக்களாகிய எமக்கு நீதி செய்யும் – நம்பிக்கை தரும் – நடவடிக்கை ஏதும் முன்னெடுக்கப்படுவதாகவே இல்லை.

இந்த சர்வதேச மனித உரிமைகள் தினத்தில் தமிழர்களின் ஒரே ஆதங்கம் – வேதனை – மனக்குமுறல் இதுதான்!

# ரணில் மீது ஹிஸ்புல்லாஹ் அடுக்கடுக்கு குற்றச்சாட்டு

## பொதுத்தேர்தலே வேண்டும் எனவும் வலியுறுத்து

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி காரணமாக உருவாகியுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பொதுத் தேர்தலை நடத்தி ஸ்தீரமான – உறுதியான அரசொன்றை அமைக்கவேண்டும் என முன்னாள் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் கலாநிதி எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

ஏறாவூர் பிரதேசத்தில் கம்பெரலிய வேலைத்திட்டத்தின் கீழ் 35 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட வீதிகள் மக்கள் பாவனைக்கு திறந்து வைக்கும் நிகழ்வு மற்றும் புதிய மக்கள் குடியேற்ற கிராமமான ஏறாவூர் அப்துல் மஜீத் மாவத்தை பிரதான வீதி ஒரு கோடி ரூபா செலவில் அமைப்பதற்கான வேலைத் திட்டம் ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு என்பன நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றன. இதில் முன்னாள் அமைச்சர் கலாநிதி எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது: –

மக்கள் பாரிய எதிர்பார்ப்போடும் – நம்பிக்கையோடும் நல்லாட்சி அரசை உருவாக்க வாக்களித்தனர். ஆனால், அந்த அரசின் பிரதானியான முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றவில்லை. மத்திய வங்கி கொள்ளையின் ஊடாக நாட்டின் பொருளாதாரம் சூறையாடப்பட்டது. 150 ரூபாவாக இருந்த டொலரின் பெறுமதி இன்று 182 ரூபாவாக உயர்கின்ற அளவு நாட்டின் பொருளாதாரம் நலிவடைந்துள்ளது.

உணவுப் பொருள்கள், எரிபொருள்கள் என அத்தியவசிய பொருட்களின் விலை நாளாந்தம் அதிகரித்துச்செல்கின்றன. நாட்டில் மது, போதைப்பொருள் பாவனை, பாதாள உலகக் கோஷ்டிகளின் செயற்பாடுகளும் அதிகரித்துள்ளன.

நாட்டு மக்களின் எதிர்பார்ப்புக்களை ரணில் தலைமையிலான அரசு செய்யத்தவறியது. பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவுமில்லை; வறுமையைப் போக்க வழி செய்யவும் இல்லை.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 50ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்க புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சு தீர்மானித்தது. அப்போது அந்த அமைச்சின் இராஜாங்க அமைச்சராக நான் இருந்தேன். ஒரு வீடு 13 இலட்சம் ரூபா செலவில் அமைக்கத் திட்டமிடப்பட்து. 50ஆயிரம் வீடுகளைக் கட்டுவதற்குத் தேவையான நிதியையும் நாம் பெற்றிருந்தோம்.

வடக்கு, கிழக்கு மாகணங்களில் யுத்தம், இயற்கை அனர்த்தங்களால் பொருளாதார ரீதியில் பெரிதும் பாதிக்கப்பட்ட ஆயிரக் கணக்கான மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்கள் தமக்கான வீடுகளைக் கட்டித்தருமாறு கோரிக்கை விடுக்கின்றனர். எனவே, 2017ஆம் ஆண்டில் 10 ஆயிரம் வீடுகளையும், 2018 இல் 15 ஆயிரம் வீடுகளையும், 2019இல் 25 ஆயிரம் வீடுகளையும் குறித்த '50 ஆயிரம் வீட்டுத் திட்டத்தின்' ஊடாக அமைக்க உலக வங்கி 2016ஆம் ஆண்டு நிதி வழங்கியது. எனினும், இத்திட்டம் தொடர்பில் முரண்பாடுகள் ஏற்பட்டபோது முன்னாள் பிரதமர் ரணில் தெளிவான – உறுதியான தீர்மானங்களை எடுக்காததன் காரணமாக இன்னும் ஒரு வீட்டைக் கூட எம்மால் கட்ட முடியவில்லை.

இதனால் கோடிக்கனக்கான நிதி அப்படியே முடங்கிக் கிடக்கின்றது. மக்களுடைய பிரச்சினைகளைப் போக்க நாங்கள் முயற்சிக்கின்றபோது பொருத்து வீடா? கல் வீடா? என்ற பிரச்சினை எழுந்தது. இது தொடர்பில் பிரதமர் தெளிவான முடிவை எடுக்காததன் விளைவாக கடந்த மூன்றரை வருடங்களில் ஒரு வீட்டைக்கூட எம்மால் கட்ட முடியவில்லை.

ஆகவே, தேவையான சந்தர்ப்பங்களில் உறுதியான–தெளிவான தீர்மானங்களை எடுக்கக் கூடிய சகல இனமக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தலைமைத்துவம் அவசியம். வடக்கு, கிழக்கு இனப் பிரச்சினைக்குத் தீர்வை முன்வைக்கக் கூடிய தலைமைத்துவம் அவசியம். மாறாக இன்னொரு சமூகத்தின் மீது திணிப்புக்களை கொண்டு வந்து பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முற்படும் தலைமைத்துவங்களுக்கு நாங்கள் ஒருபோதும் இடமளிக்க முடியாது.

எனவே, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமராக ரணில் விக்கிரமசிங்கவை அப்பதவியிலிருந்து நீக்கிவிட்டு சில தீர்மானங்களை எடுக்கவேண்டி ஏற்பட்டது. இதனால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்குப் பொதுத் தேர்தலை நடத்துவதே தீர்வாக அமையும். யார் ஆட்சியமைத்தாலும் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் இல்லாத நிலையில் அரசைக் கொண்டு செல்ல முடியாது. ஆகவே, ஒரு ஸ்தீரமான – நிலையான அரசு உருவாக வேண்டும்.

நாட்டைக் கட்டியெழுப்பக் கூடிய உறுதியான ஓர் அரசு அமைகின்றபோதுதான் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியும். தடைப்பட்ட வீட்டுத் திட்டத்தைக் கொண்டு செல்ல முடியும். வெளிநாட்டு நிதி வளங்களைக் கொண்டுவர முடியும். நாட்டிலுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும். இன ரீதியாக முரண்பாடுகளைக் களைய முடியும். இவற்றைச் செய்வதாக இருந்தால் பொதுத் தேர்தலை நடத்தி உறுதியான அரசொன்றை அமைக்க வேண்டும்.

ஆகவே, பொதுத் தேர்தலின் ஊடாக மட்டும்தான் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் என ஜனாதிபதி தீர்மானித்துள்ளார். அது தொடர்பில் நாங்களும் உறுதியாக உள்ளோம். நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் பிரச்சினைகள் எதிர்வரும் 12ஆம் திகதிக்கு முன்னர் சுமுகமான நிலைக்குக் கொண்டு வருவதற்கான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன – என்றார்.

## ரூ. 1000 இற்காக தொழிலாளர் திண்டாட்டம்;

# அவசரமாக இன்று மைத்திரியை சத்துத்துப் பேசுவார் தொண்டா!

கொழும்பு, டிசெ. 10

ஆயிரம் ரூபா சம்பள உயர்வைக்கோரி தொழிலாளர்களால் முன்னெடுக்கப்படும் போராட்டத்துக்கான அறைகூவல் அவசரப்பட்டு விடுக்கப்பட்டதல்ல. இலக்கை அடைவதற்காகத் திட்டமிட்ட அடிப்படையிலேயே தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுவருகின்றது என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தார்.

கொட்டகலை சீ.எல்.எப் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு: –

ஆயிரம் என்ற கோரிக்கையிலிருந்து இ.தொ.கா. ஒருபோதும் பின்வாங்காது. 600 ரூபா அடிப்படை சம்பளமாகவும், மேலதிக கொடுப்பனவுகள் இணைத்ததாக 925 ரூபாவை வழங்கத் தயார் என முதலாளிமார் சம்மேளனம் அறிவித்தது. இதற்கு நாம் உடன்படவில்லை. ஆயிரம் ரூபாவே தேவையெனத் திட்டவட்டமாக அறிவித்தோம். அந்தக் கோரிக்கைக்கு வலுச் சேர்க்கும் வகையிலும், கம்பனிகளுக்கு அழுத்தம் கொடுக்கும் நோக்கிலுமே போராட்டங்கள் நடத்தப்பட்டுவருகின்றன.

கடந்த 6 நாள்களாக எவ்வித பிரச்சினையுமின்றிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. தீர்வு கிடைக்கும்வரை போராட்டம் தொடரும். அதேநேரத்தில் கடந்த முறை ஒன்றரை வருடங்களாக அதவாது 18 மாதங்கள் பேச்சு முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் அதன்போது வழங்கப்பட வேண்டிய நிலுவைப் பணம் அதிகம் என்பதனால் இதனை வழங்க மறுத்தனர். இதற்கு வேறு காரணங்களும் இருந்தன.

ஒக்ரோபர் 26 ஆம் திகதி பேச்சு நடைபெறவிருந்த நிலையில், அரசியல் குழப்பம் ஏற்பட்டதால் அது ஒத்திவைக்கப்பட்டது.

ஜனாதிபதியுடன் இவ்விவகாரம் தொடர்பில் இன்று கொழும்பில் பேச்சு நடத்தப்படும். சம்பள விவகாரத்தில் தலையிடுமாறு ஜனாதிபதியிடம் கோரவுள்ளோம் – என்றார். (ஐ)

### நாளை

11.12.2018
செவ்வாய்க்கிழமை
நட்சத்திரம்: உத்தராடம் பி.ப 1.22 வரை
திதி : சதுர்த்தி மு.இ 7.39 வரை
சுபநேரம் : 10.49 – 12.19 வரை
இராகுகாலம் : 3.19 – 4.49 வரை

# பொலிஸார் படுகொலைக்கு எதிராக வவுனியாவில் நேற்றுப் போராட்டம்





மட்டக்களப்பு, வவுணதீவுப் பகுதியில் இடம்பெற்ற பொலிஸாரின் படுகொலைச் சம்பவத்தைக் கண்டித்து வவுனியாவில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா பழைய பஸ் நிலையத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்டப் பேரணி கடை வீதி வழியாக இலுப்பையடிப் பகுதிவரை சென்று நிறைவடைந்தது.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஆர்ப்பாட்டக்காரர்கள்,

வவுணதீவு கொலையுடன் தொடர்புபட்டவர்களை அடையாளம் கண்டு அவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். ஆயுதங்களுடன் நின்றவர்களுக்கே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக ஆயுதங்கள் வைத்திருப்பவர்களைப் பொலிஸார் அடையாளம் காணவேண்டும். இந்தச் சம்பவத்தால் மூவின மக்களிடையேயும் ஒருவிதமான அமைதியின்மை ஏற்பட்டுள்ளது. ஒற்றுமையான முறையில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களிடையே குழப்பங்களை ஏற்படுத்தச் சிலர் முனைகின்றார்கள்.

30 வருட யுத்தத்தின் விளைவுகளே எமக்கு போதும். சமாதானத்தை சீர்குலைக்கும் நடவடிக்கைகளை யாரும் மேற்கொள்ளக்கூடாது, அவ்வாறானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் – என்றனர். (ஐ)

சர்வதேச மனித உரிமைகள் தினத்தையொட்டி

## நல்லூர் துர்க்கா மண்டபத்தில் இன்று காலை சிறப்பு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், டிசெ. 10

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இன்று காலை 9.30 மணி முதல் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இன்று காலை சமாதான பேரணியும் இடம் பெறவுள்ளது.

யாழ்ப்பாண மனித உரிமைகள் முதலுதவிச் சங்கம் மற்றும் இலங்கை தேசிய சமாதான பேரவை இணைந்து நிகழ்வுகளை நடத்துகின்றன.

யாழ். மனித உரிமை முதலுதவிச் சங்கத்தின் தலைவர் முத்துக்குமாரு உதயஸ்ரீ தலைமையில் நடைபெறும். இன்றைய நிகழ்வுகளுக்கு விருந்தினர்களாக யாழ். மாநகர சபை முதல்வர் இம்மானுவல் ஆர்னோல்ட், இலங்கை தேசிய சமாதான பேரவைப் பணிப்பாளர் பேராசிரியர் மா.பெ.மூக்கையா, யாழ் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய ஆணையாளர் ரி.கனகராஜ், –

காங்கேசன்துறை பிரிவு பொலிஸ் அத்தியட்சகர் பி.யு.உடுகம, இலங்கை ஏதிலியர் மறுவாழ்வு கழகத் தலைவி செல்வி சி.சூரியகுமாரி, இலங்கை தேசிய சமாதான பேரவை இணைப்பாளர் ந.விஜயகாந்தன் நல்லூர் பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத் தர் த.கனகராசா ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

பாடசாலை மாணவர்களின் நிகழ்வுகளுடன் நாடகமும் இடம்பெறும்.

# எம்.பிக்கள் பேரம் பேசலில் ஜனாதிபதிக்கும் பங்குண்டு

## அஜித் பீ பெரேரா அதிரடிக் கருத்து



கொழும்பு, டிசெ. 10

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரால் நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்குவதற்கான நடவடிக்கை இடம்பெற்றது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பீ பெரேரா தெரிவித்தார்.

அத்தோடு இதனை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் ஏற்றுக் கொண்டுள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

பண்டாரகமவில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அஜித் பீ பெரேரா இதனைச் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் – அந்தவகையில் ஒருவருக்கு 50 கோடி ரூபா வரையில் பேரம் பேசப்பட்டதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறினார். மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது குழுக்களாலேயே அந்த விலை நிர்ணயம் வழங்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஜனநாயகத்தை ஏற்படுத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

அதுமட்டுமன்றி நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லாத மஹிந்த நாட்டை ஆள்வதற்கு எந்த விதமான தகுதியும் கிடையாது – என்றார். (ஐ)

# பொதுத் தேர்தல் நடத்தாமல் நெருக்கடி நிலைமை தீராது

## கூறுகிறார் டலஸ் அழகப்பெரும

கொழும்பு, டிசெ. 10

தற்போதைய அரசியல் நெருக்கடி, ஒரு பொதுத் தேர்தல் நடத்தாமல் தீர்க்கப்படாது என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப் பெரும தெரிவித்தார்.

வெலிகம பகுதியில் இடம்பெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

நிறைவேற்று அதிகாரதிற்கும் சட்டநெறிமுறைகளுக்கும் இடையில் நிலவும் பிரச்சினைக்குத் தீர்வாக ஒரு ஆணைக்குழுவை அமைத்து அதன் மூலம் உண்மையைக் கொண்டுவர முடியும் –என்றார். (ஐ)



## வெள்ளவத்தையில் சிவலிங்கம் பிரதிஷ்டை



கொழும்பு வெள்ளவத்தையில் அமைந்துள்ள கங்காதீஸ்வரர் யாக பீடத்தில் சிவலிங்க பிரதிஷ்டையும் குடமுழுக்கும் இடம்பெற்றுள்ளது.

உலக சைவ திருச்சபையின் ஏற்பாட்டில் நேற்று முன் தினம் சனிக்கிழமை காலை இந்த நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

இதன்போது விசேட பூஜைகளும் அபிகே ஆராதனைகளும் இடம்பெற்றுள்ளன.

முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதி தலைவரும் உலக சைவ திருச்சபையின் இலங்கைக்கான தலைவருமான கலாநிதி வேலுசாமி இராதாகிருஸ்ணனின் வழிகாட்டலின் பேரில், உலக சைவ திருச்சபையின் தலைவர் கலாநிதி அடியார் விபுலாநந்தா மற்றும் சிவ பக்தர் சாமி கங்காதரன் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் இந்த நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன. (ஐ)

# பண்டிகைக் காலத்தையொட்டி விசேட ரயில், பஸ் சேவைகள்

கொழும்பு, டிசெ. 10

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு விசேட ரயில் சேவை முன்னெடுக்கப்படவுள்ளது.

கொழும்பு கோட்டை மற்றும் பதுளை நகரங்களுக்கு இடையில், ஜனவரி மாதம் 7 ஆம் திகதி வரை இந்த ரயில் சேவை முன்னெடுக்கப்படும் என ரயில்வேத் திணைக்களத்தின் பொது முகாமையாளர் டிலந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இந்த விசேட ரயில் சேவை, நேற்று முன் தினம் முதல் காலை 7.30 மணிக்குக் கொழும்பிலிருந்து பதுளை நோக்கிப் புறப்படும் என அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், பண்டிகைக் காலத்தை முன்னிட்டு எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் விசேட பஸ் சேவையொன்றை ஆரம்பிக்கவுள்ளதாக இலங்கைப் போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.

இதுதவிர, எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் நீர்கொழும்பு, ஜா – எல, வென்னப்புவ போன்ற பகுதிகளுக்கும், குறுந்தூர பஸ் சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் போக்குவரத்துச் சபையின் தலைவர் ரமால் சிறிவர்தன சுட்டிக்காட்டினார். (ஐ)

# வான் – லொறி நேரடி மோதல் மகாராஷ்டிராவில் 10 பேர் பலி



நாக்பூர்,டிசெ.10

இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலத்தில் வான் – லொறி மோதிய விபத்தில் 7 பெண்கள் உட்பட 10 பேர் கொல்லப்பட்டனர்.

மகாராஷ்டிராவின் சந்திராபூர் மாவட்டத்தில் 14 பயணிகளை ஏற்றி கொண்டு வான் ஒன்று சென்றுள்ளது. கோர்பனாவில் இருந்து வானி செல்லும் சாலையில் லொறி ஒன்று அதன் மீது நேரடியாக மோதி விபத்துக்குள்ளானது.

இந்த சம்பவத்தில் 7 பெண்கள், வான் சாரதி, 3 வயது குழந்தை மற்றும் மற்றொரு நபர் என 10 பேர் பலியாகி உள்ளனர்.

இந்த விபத்தில் 3 பேர் காயமடைந்து உள்ளனர். அவர்கள் அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு உள்ளனர். ஒரு வயது குழந்தை காயம் எதுவுமின்றி தப்பியது.

சம்பவத்திற்குப் பின்னர் லொறிச் சாரதி அங்கிருந்து தப்பியோடி விட்டார். இதுபற்றி பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

(உ)

# ஜம்மு காஷ்மீரில் கிடுகிடு பள்ளத்தில் வீழ்ந்து நொறுங்கி சுக்குநூறான பஸ்

## 11 பயணிகள் சாவு; 19 பேர் படுகாயம்



பள்ளத்தில் உருண்டு சுக்குநூறான பஸ்ஸின் உடைந்த ஒரு பகுதி.

காஷ்மீர்,டிசெ.10

இந்தியாவின் ஜம்மு – காஷ்மீர் மாநிலம், பூஞ்ச் மாவட்டத்தில் பிர் பாஞ்சல் பள்ளத்தாக்குப் பகுதியில் சாலையிலிருந்து தடம்புரண்ட பஸ் ஒன்று பெரிய பள்ளத்தில் உருண்டு விழுந்த பயங்கர விபத்தில் 11 பேர் பலியாகினர். 19 பேர் படுகாயமடைந்துள்ளனர். பஸ் சுக்குநூறானது.

வெள்ளியன்று காலை 9.15 மணிக்கு இந்த விபத்து நடந்துள்ளது. லோரானிலிருந்து பூஞ்ச் நோக்கி வந்து கொண்டிருந்த பஸ் மலைப்பாதையில் சென்று கொண்டிருந்தது. பக்கத்தில் கிடுகிடு பள்ளம். அப்போது திடீரென அது தடம் மாறி அந்தப் பெரிய பள்ளத்தில் உருண்டது. அது சுக்குநூறாக உடைந்ததாக நேரில் பார்த்தவர்கள் கூறினர் என்று ஏ.என்.ஐ. செய்திகள் தெரிவிக்கின்றன.

இதில் 11 பேர் பலியாக, 19 பேர் படுகாயம் அடைந்தனர். 5 பேர் உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மீட்புக் குழுவினர் சம்பவ இடத்துக்கு விரைந்துள்ளனர்.

(உ)

# ‘லஷ்கர் இ – தொய்பா’ இயக்கமே மும்பைத் தாக்குதலை நடத்தியது

## முதற் தடவையாக ஒப்புக் கொண்டது பாக்.

இஸ்லாமாபாத்,டிசெ.10

இந்தியாவின் மும்பையில் 2008 ஆம் ஆண்டு தாக்குதலை நடத்தியது ‘லஷ்கர் இ-தொய்பா’ இயக்கம்தான் என்று பாகிஸ்தான் முதல் முறையாக வெளிப்படையாக ஒப்புக்கொண்டு உள்ளது.

இந்தியாவின் வர்த்தக தலைநகரான மும்பைக்குள் 2008 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் திகதி கடல் வழியாக புகுந்த பாகிஸ்தான் ஆதரவு பயங்கரவாதிகள் 10 பேர் நகரின் பல்வேறு இடங்களில் வெடிகுண்டு தாக்குதல் நடத்தினர். துப்பாக்கியாலும் கண்மூடித்தனமாக சுட்டனர். இதில் 6 அமெரிக்கர்கள் உட்பட 166 அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதலை உலக நாடுகள் வன்மையாக கண்டித்தன. தாக்குதலில் ஈடுபட்ட பாகிஸ்தான் ஆதரவு லஷ்கர் இ-தொய்பா பயங்கரவாத இயக்கம் மீது கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என பாகிஸ்தானை இந்தியா வலியுறுத்தியது.

இதையடுத்து கண்துடைப்பு நாடகம் போல் பாகிஸ்தான் விசாரணை கமிஷன் ஒன்றை அமைத்தது. ஆனால் லஷ்கர் இ-தொய்பா இயக்கத்தின் தலைவரும், மும்பைத் தாக்குதலுக்குமூளையாகசெயல்பட்டவருமான ஹபீஸ் சயீத் உள்ளிட்ட



யார் மீதும் பாகிஸ்தான் சரியான நடவடிக்கை எடுக்கவில்லை என இந்தியா குற்றம் சுமத்தி வருகிறது.

இந்த நிலையில் அமெரிக்காவின் ‘வொஷிங்டன் போஸ்ட்’ பத்திரிகைக்கு பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் அளித்த பேட்டியில் மும்பை தாக்குதலை நடத்தியது லஷ்கர் இ-தொய்பா தான் என்பதை ஒப்புக்கொண்டு உள்ளார். மும்பை தாக்குதல் குறித்து பாகிஸ்தான் வெளிப்படையாக இதுபோல் ஒப்புக் கொண்டிருப்பது இதுவே முதல் முறை ஆகும்.

இதுபற்றி இம்ரான்கான் கூறுகையில், மும்பை தாக்குதல் நடத்தியது லஷ்கர் இ-தொய்பா அமைப்புதான். இந்த தாக்குதல் தொடர்பான வழக்கில் சரியான தீர்வுகாணப்படும். வழக்கு குறித்த முழு விவரங்களையும் என்னிடம் அளிக்குமாறு கேட்டிருக்கிறேன் என்று குறிப்பிட்டு உள்ளார்.

அதேபோல் பாகிஸ்தானின் அபோதாபாத் நகரில் பதுங்கியிருந்த அல்கொய்தா பயங்கரவாத இயக்கத்தின் தலைவர் பின்லேடனை கொல்வதற்கு பாகிஸ்தானுக்கு தெரியாமல் அமெரிக்க படைகள் புகுந்து நடத்திய தாக்குதலையும் தனது பேட்டியில் அவர் கண்டித்தார்.

இதுபற்றி அவர் கூறும்போது, பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் அமெரிக்காவுக்கு ஆதரவாக பாகிஸ்தான் செயல்பட்டபோது, வெடிகுண்டு தாக்குதலில் ஏராளமான பாகிஸ்தானிய இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

ஆனாலும் எங்கள் மீது நம்பிக்கை வைக்காமல் 2011 இல் பாகிஸ்தானுக்குள் புகுந்து அமெரிக்க இராணுவம் பின்லேடனைக் கொன்று விட்டது. இது எங்களுக்கு அவமானம் ஆகும். நான் அமெரிக்காவுக்கு எதிரானவன் என்பதும் தவறு என்று குறிப்பிட்டார்.

(உ)

# மத்திய அமைச்சரை அறைந்த இளைஞர்! தர்ம அடியால் இப்போது ஆஸ்பத்திரியில்

மகாராஷ்டிரா மாநிலம் மும்பையில் உள்ள புறநகர் பகுதியில் ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்க வந்திருந்த மத்திய அமைச்சர் ராமதாஸ் அதவாலே கன்னத்தில் இளைஞர் ஒருவர் அறைந்ததால், பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

அதன்பின் அந்த இளைஞரைக் கூட்டத்தினர் பிடித்து, தர்ம அடி கொடுத்து பொலிஸில் ஒப்படைத்தனர். படுகாயங்களுடன் அந்த இளைஞன் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மத்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறையின் இணை அமைச்சராக இருப்பவர் ராமதாஸ் அதவாலே. இவர் இந்திய குடியரசுக் கட்சியின் தலைவராகவும் உள்ளார். மத்தியில் ஆளும் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியிலும் இந்திய குடியரசுக் கட்சி அங்கம் வகிக்கிறது.



இந்நிலையில், மும்பையின் புறநகரான தானேயில் உள்ள அம்பர்நாத் பகுதியில் ஒரு நிகழ்ச்சிக்கு மத்திய அமைச்சர் ராமதாஸ் அதவாலே வந்திருந்தார். அந்த நிகழ்ச்சியில் பங்கேற்று

**மும்பை புறநகர்ப் பகுதியில் சம்பவம்**

விட்டு அமைச்சர் ராமதாஸ் அதவாலே வெளியேறிய போது, இந்திய குடியரசுக் கட்சியின் கொடியைப் பிடித்துக்கொண்டு அவர் முன் வந்தார்.

தன்னுடன் செல்ஃபி எடுக்கக் கோரிய இந்த இளைஞர், திடீரென அமைச்சரைக் கீழே தள்ளி, அவரின் கன்னத்தில் அறைந்தார், யாரும் எதிர்பாராமல் நிகழ்ந்த சம்பவத்தைப் பார்த்த அங்கிருந்தவர்கள் அதிர்ச்சியில் திகைத்தனர். அந்த இடத்தில் இருந்து ஓட முயன்ற அந்த இளைஞரை அங்கிருந்தவர்கள் வளைத்துப் பிடித்து தர்ம அடி கொடுத்தனர்.

பின்னர் அமைச்சரின் பாதுகாவலர்களும் தங்கள் பங்கிற்கு அடித்து, அந்த இளைஞரை பொலிஸில் ஒப்படைத்தனர். இந்த இளைஞரிடம் விசாரணை நடத்தியதில் அவரின் பெயர் பிரவின் கோசாவி என்பதும் அவர் இந்திய குடியரசுக் கட்சியைச் சேர்ந்தவர் என்பதும் தெரியவந்தது. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள அந்த இளைஞரிடம் அமைச்சரை அடித்தற்கான காரணத்தைக் கேட்டு பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து, அமைச்சர் ராமதாஸ் அதவாலே அங்கிருந்து உடனடியாக மும்பை புறப்பட்டுச் சென்றார். இந்தச் சம்பவத்துக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ள இந்திய குடியரசுக் கட்சியின் மூத்த தலைவர்கள், இது திட்டமிட்ட தாக்குதல் என்றும், இதைக் கண்டித்து மஹாராஷ்டிரா மாநிலம் முழுவதும் பந்த் நடத்தப்படும் என்றும் தெரிவித்துள்ளனர்.

# பிரான்ஸில் தொடரும் மக்கள் போராட்டம் பாரிஸில் சனியன்று 575 பேர் வரை கைது

பாரிஸ், டிசெ.10

எரிபொருள் விலை உயர்வுக்கு எதிராக பிரான்ஸில் தொடர்ந்து நடைபெற்று வரும் போராட்டங்களின் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் தலைநகர் பாரிஸில் இடம் பெற்ற போராட்டத்தில் மீண்டும் வன்முறை வெடித்தது. இது தொடர்பாக 575 பேர் கைது செய்யப்பட்டனர்.




பிரான்ஸ் நாட்டில் டீசல் வரி உயர்வுக்கு எதிராக தொடங்கிய போராட்டம், இப்போது திசை மாறி உள்ளது. டீசல் மீதான வரி உயர்வை அரசு நிறுத்தி வைத்துள்ள நிலையில், அரசின் பிற கொள்கைகளை எதிர்த்தும், வாழ்வாதார பிரச்சினைகளை மையமாக கொண்டும் போராட்டங்கள் வலுத்து வருகின்றன.

பாரிஸில் சனியன்று போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்ததால் வன்முறை மூளும் என்ற எதிர்பார்ப்பில் 8 ஆயிரம் பொலிஸார் அங்கு குவிக்கப்பட்டிருந்தனர்.

அங்கு சாம்ப்ஸ் எலிசீஸ் அவினியூவில் கூடிய போராட்டக்காரர்கள், பேரணியாக புறப்பட்டனர். சிறிது தூரத்தில் பொலிஸார் அவர்களைத் தடுத்து நிறுத்தினர். போராட்டக்காரர்களுக்கும், பொலிஸாருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.

இதில் வன்முறை மூண்டது. தீ வைப்பு சம்பவங்கள் நடந்தன. ஈபிள் கோபுரம் உள்ளிட்ட சுற்றுலா தலங்கள் மூடப்பட்டிருந்தன. திறந்திருந்த கடைகள் அடித்து நொறுக்கப்பட்டன. போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் கண்ணீர்ப்புகை குண்டுகளை வீசி விரட்டியடித்தனர்.

பாரிஸ் புறநகரில், பாரிஸுக்குச் செல்லும் முக்கிய வழித்தடமான போர்ட்டே மெய்லட்டில் போராட்டக்காரர்கள் தடைகளை ஏற்படுத்தினர். மஞ்சள் சட்டை இயக்கத்தினர் போக்குவரத்தை முடக்கினர். இதனால் அங்கு பதற்றம் நிலவியது

# மெக்ஸிக்கோ யுவதி உலக அழகியானார்

சான்யா,டிசெ.10




மெக்ஸிக்கோவின் வனேசா போன்ஸ் டி லியோன் 68 ஆவது உலக அழகி பட்டத்தை வென்றுள்ளார்.

சீனாவின் சான்யா நகரில் 68 ஆவது உலக அழகிப் பட்டத்திற்கான போட்டி நேற்று நடந்தது. இதில், மெக்ஸிக்கோ நாட்டை சேர்ந்த வனேசா போன்ஸ் டி லியோன் பட்டத்தினை வென்றுள்ளார். அவருக்கு முன்னாள் உலக அழகியான இந்தியாவின் மனுஷி சில்லார் மகுடம் சூட்டினார்.

வனேசா சர்வதேச வணிகத்தில் பட்டப்படிப்பு படித்துள்ளார். இவர் மொடலாகவும் மற்றும் நிகழ்ச்சி நடத்துபவராகவும் இருந்து வருகிறார். இந்த பட்டம் வென்றமை பற்றி அவர் கூறும்பொழுது, என்னால் இதனைநம்பமுடியவில்லை. மெக்ஸிக்கோவில் இருந்து வந்திருந்த மக்கள் மற்றும் என்னுடைய நண்பர்கள் எனக்கு ஆதரவாக இருந்தனர்.- என்று தெரிவித்தார்.

# அமெரிக்கா முன்னெடுப்பது பொருளாதாரத் தீவிரவாதம்

## ஈரான் ஜனாதிபதி ஹசன் ருஹானி காட்டம்

தெஹ்ரான், டிசெ.10



ஈரான் மீது அமெரிக்கா விதித்துள்ள தடையானது சட்டவிரோதமானது, நியாயமற்றது அத்தோடு அது பொருளாதாரத் தீவரவாத நடவடிக்கையுமாகும் என்று அந்நாட்டு அதிபர் ஹசன் ருஹானி கூறியுள்ளார்.

கடந்த 2015 ஆம் ஆண்டு, அமெரிக்க ஜனாதிபதியாக ஒபாமா இருந்தபோது, ஈரானுக்கும், அமெரிக்கா உள்ளிட்ட வல்லரசு நாடுகளுக்கும் இடையே அணுசக்தி ஒப்பந்தம் கையெழுத்தானது.

அதன் பின் டொனால்ட் டிரம்ப் அமெரிக்க ஜனாதிபதி ஆன நிலையில், அந்த ஒப்பந்தத்தால் பயன் இல்லை என்று கருத்து தெரிவித்தார். ஈரான் தனது வருவாயை பயங்கரவாதத்துக்கு பயன்படுத்துவதாகவும் நினைத்தார். எனவே, கடந்த மே மாதம், ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா வெளியேறியது.

அத்துடன், ஈரானுடன் எவ்வித வர்த்தக தொடர்பும் வைத்துக்கொள்ளக்கூடாது என்று மற்ற நாடுகளை டிரம்ப் மிரட்டினார். ஈரானின் வருவாயை குறைக்க நினைத்த அவர், ஈரானிடம் இருந்து மசகு எண்ணெய் வாங்குவதை நவம்பர் 4 ஆம் திகதியுடன் எல்லா நாடுகளும் நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று எச்சரித்தார். இதில் இந்தியா, சீனா உள்ளிட்ட சில நாடுகளுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டது.

இந்த நிலையில், அந்நாட்டின் தலைநகர் தெஹ்ரானில் ஆப்கானிஸ்தான், சீனா, பாகிஸ்தான், ரஷ்யா மற்றும் துருக்கி ஆகிய நாடுகளின் அதிகாரிகள் கலந்து கொண்ட கூட்டத்தில் ஈரான் அதிபர் ஹசன் ருஹானி பேசினார்.

அவர் பேசும்பொழுது, கௌரவமிக்க நாடான ஈரான் மீது விதித்துள்ள அமெரிக்காவின் நியாயமற்ற மற்றும் சட்ட விரோத முறையிலான தடைகளானது தெளிவாக எங்களுடைய நாட்டை இலக்காக கொண்டு நடைபெறும் தீவிரவாதம் என கூறினார்.

ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் அச்சத்தினை உருவாக்குவதற்காக பொருளாதார தீவிரவாதம் ஆனது வடிவமைக்கப்பட்டு உள்ளது. இந்த இலக்கிற்குள்ளான நாட்டில் முதலீடு செய்யாமல் தடுக்கும் வகையில் மற்ற நாடுகளுக்கும் அச்சத்தினை தோற்றுவித்துள்ளது என்று அவர் கூறியுள்ளார்.

# எகிப்தின் பிரமிட் மீது ஏறி நின்று நிர்வாணப் படம் பிடித்த தம்பதி!

## யு டியுப்பில் வெளியானதால் சர்ச்சை



கெய்ரோ, டிசெ.10

எகிப்தில் உலக புகழ்பெற்ற பிரமிட் மீது ஏறிநிர்வாணபடம் எடுத்தனர் எனக் கூறப்படும் வெளிநாட்டுத் தம்பதியினர் குறித்து விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

எகிப்து நாட்டில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட பிரமிட்கள் இன்றைக்கும் சுற்றுலாப்பயணிகளை, வரலாற்று ஆய்வாளர்களை கவர்வனவாக அமைந்துள்ளன.

உலகின் ஏழு பழைய அதிசயங்களில் ஒன்றாகக்கருதப்படுகிற கிசாவின் கூபு பிரமிட் அங்குதான் உள்ளது. புகழ்பெற்ற அந்த பிரமிட்டின் உச்சிக்கு இரவு நேரத்தில் ஒரு வெளிநாட்டு தம்பதி சென்று, நிர்வாணமாக கட்டித்தழுவி உள்ளனர்.

இது பற்றிய 3 நிமிட வீடியோக் காட்சி, யு டியுப்பில் வெளியாகி எகிப்தில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தி உள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடத்துமாறு அந்த நாட்டின் அரசுத் தலைமை சட்டத்தரணிக்கு தொல்பொருள்துறை அமைச்சர் காலித் அல் அனானி உத்தரவிட்டுள்ளார்.

இதுபற்றி எகிப்து தொல்பொருள் துறை அமைச்சகம் ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில், வெளிநாட்டினர் 2 பேர் பிரமிட் உச்சியில் இரவு நேரத்தில் ஏறி, நிர்வாணப்படம் எடுத்து, அதை சுழற்சியில் விட்டிருக்கின்றமை பொது ஒழுக்கத்தை மீறுவதாக அமைந்துள்ளது. இதில் உண்மையைக் கண்டறியவும், தேவையான நடவடிக்கை எடுக்கவும் தொல் பொருள்துறை அமைச்சர் காலித் அல் அனானி முடிவு செய்துள்ளார். இதுபற்றி அரசு தலைமை சட்டத்தரணி விசாரணை நடத்த அறிவுறுத்தப்பட்டுள்ளார் எனக் கூறப்பட்டுள்ளது.

# இத்தாலி இரவு விடுதியில் தீ விபத்து கூட்ட நெரிசலில் சிக்கி 6 பேர் சாவு!

இத்தாலியில் இரவு விடுதியில் தீ விபத்தை அடுத்து ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 6 பேர் பலியாகினர். 12 பேர் காயமடைந்தனர்.

இதுகுறித்து தீயணைப்பு அதிகாரிகள் தரப்பில், இத்தாலியில் உள்ள காரினால்டோ நகரத்தில் உள்ள இரவு விடுதியில் நேற்று நள்ளிரவு தீ விபத்து ஏற்பட்டது. விடுதியில் இருந்த பேப்பர் ஸ்பிரே திடீரென தீப்பிடித்தவுடன் விடுதியில் இருந்த மக்கள் அங்கும் இங்குமாக ஓடத் தொடங்கினர்.

இதில் நெரிசலில் சிக்கி 6 பேர் பலியாகினர். நூறுக்கும் மேற்பட்டவர்கள் காயம் அடைந்தனர். காயமடைந்தவர்கள் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த தீ விபத்து அதிகாலை சுமார் 1மணியளவில் ஏற்பட்டுள்ளது என்றார்.

தீ விபத்து ஏற்பட்ட விடுதியில் இசை நிகழ்வு நடைபெற இருந்தது, பிரபல ராப்பர் சஃபேரா எபஸ்டா கலந்து கொண்டிருக்கிறார், சுமார் 1000க்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் இரவு விடுதியில் கூடியிருந்தனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

விபத்தை நேரில் பார்த்த இளைஞர் ஒருவர் கூறும்போது, அந்த நிகழ்ச்சி தொடங்க இருந்தது. நாங்கள் நடனம் ஆடுவதற்குத் தயாராக இருந்தோம். அப்போது புகையும், கருகும் மணமும் வந்தது. அதனைத் தொடர்ந்து நாங்கள் ஓட ஆரம்பித்துவிட்டோம் என்றார்.

விபத்து ஏற்பட்ட காரணம் குறித்து அதிகாரிகள் விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir



## நல்லூர் பிரதேசத்தில் ‘கஜா’ புயல் பாதிப்பு:

# குடிசைகளில் வசிக்கும் குடும்பங்கள் போதிய நிதியுதவி இன்றி பேரவலம்







யாழ்ப்பாணம், டிசெ.10

கடந்த மாத ‘கஜா’ பயல் அனர்த்தத்தினால் நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் குடிசை வீடுகளில் வசித்து வந்த மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். 45 குடும்பங்கள் தங்களின் குடிசைகளை புனரமைக்க முடியாமல் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

இது குறித்து பிரதேச வாழ் மக்கள் கூறியவை வருமாறு:-

எங்களது இருப்பிடங்கள் மண்ணினாலும், ஓலைகள் மற்றும் தகரங்களினாலும் அமைக்கப்பெற்றமையினால் பலத்த காற்று மற்றும் மழையினால் பாதிப்புற்றுள்ளன. இதற்காக எமக்கு அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் உலர் உணவும் 10 ஆயிரம் ரூபாவும் நிதியும் வழங்கப்பட்டுள்ளது. எமது இருப்பிடங்கள் குடிசை வீடுகளாக இருக்கின்றமையால் பாதிப்பின் பின்பு பெய்த மழையினால் மேலும்ங சேதங்கள் ஏற்பட்டுள்ளன. அதனால் குடிசைகள் எவ்வேளையிலும் இடிந்து விழும் நிலையிலேயே உள்ளன. - என்று வேதனையுடன் கூறினர்.

இது தொடர்பாக பிரதேச செயலாளருடன் தொடர்பு கொண்ட போது, தமது பிரிவில் குடிசையில் வாழ்ந்த குடும்பங்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன எனவும் அக்குடும்பங் களுக்கு அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் கீழ் வழங்கப்பட்ட உலர் உணவு மற்றும் வீடு புனரமைப்பிற்காக நிதி வழங்கப்பட்டது எனவும் மேலதிக நிதி குறித்த அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் ஒதுக்கித்தந்தால் வழங்க முடியும் எனவும் தெரிவிக்கப் பட்டது.

அனர்த்தம் ஏற்படுவதற்கு முன்பு அனர்த்த முகாமைத் துவ அமைச்சு பல்வேறு முன்னாயத்தங்களைச் செய்த போதிலும், பாதிப்பின் பின்பு இவ்வாறான உதவி மாத்திரமே வழங்கப்பட்டமை தொடர்பாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

# ‘மனிதன் மனிதனாக வாழ்வதற்கான உரிமை ஒவ்வொருவருக்கும் உறுதி செய்யப்பட வேண்டும்’

**இன்று (10.12.2018) சர்வதேச மனித உரிமைகள் தினமாகும். அதனையொட்டி இந்த ஆக்கம் வெளியிடப்படுகின்றது.**



மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதை எல்லா தரப்பினரிடமும் வலியுறுத்துவதே, மனித உரிமை நாள் கொண்டாடப்படுவதன் நோக்கம். இது அடிப்படை உரிமை.

சர்வதேச மனித உரிமை தினம் இன்று. உலகில் உள்ள ஒவ்வொரு மனிதனுக்கும், அவனால்விட்டுக்கொடுக்க முடியாத, உரிமைகளை மனித உரிமை என்று சொல்கிறோம். மனிதன் ஒவ்வொருவனும் தானும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழ விடவேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் ஆண்டு தோறும் டிசெம்பர் 10 ஆம் திகதி, சர்வதேச மனித உரிமை நாளாகக் கொண்டாடப்படுகிறது.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு 1945ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கப்பட்டது. அதற்கு அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் 16 ஆம் திகதி ஐ.நா. சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழு ஏற்படுத்தப்பட்டது. இதில் 53 நாடுகள் அங்கம் பெற்றன.

முதல் பணியாக, சர்வதேச மனித உரிமைப் பிரகடனத்தை உருவாக்க வேண்டும் என்று இந்தக் குழு முடிவு செய்தது. இதற்காக அமெரிக்க அதிபரின் மனைவி எலினா ரூஸ்வெல்ட் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழு, 30 பிரிவு களின் கீழ் மனித உரிமைகளை அடையாளம்கண்டு உலக மனித உரிமைகள் பிரகடனத்தை ஐக்கிய நாடுகள் சபையில் சமர்ப்பித்தது.

இந்தப் பிரகடனத்துக்கு ஐக்கிய நாடுகள் சபையில் 58 நாடுகள், 1948ஆம் ஆண்டு டிசெம்பர் 10ஆம் திகதி அங்கீகாரம் வழங்கின. இந்தநாள்தான் 1950 ஆம் ஆண்டு முதல் சர்வதேச மனித உரிமை நாளாக அறிவிக்கப்பட்டு ஆண்டு தோறும் கொண்டாடப்பட்டு வருகிறது.

மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதை எல்லா தரப்பினரிடமும் வலியுறுத்துவதே, மனித உரிமை நாள் கொண்டாடப்படுவதன் நோக்கம். உலகில் உள்ள எல்லா மனிதர்களும் சமமானவர்களே. எல்லாருக்கும் சம உரிமை உண்டு. மற்றவர்களிடம் இருந்து நாம் என்ன உரிமையை எதிர்பார்க்கிறோமோ அதே உரிமையை அவர்களுக்கும் நாம் தர வேண்டும். யாரையும் யாரும் அடிமைப் படுத்தக் கூடாது.

மனிதனின் கௌரவத்தையும் அவனின் பிரிக்க முடியாத உரிமைகளை அறிந்து ஏற்றுக்கொள்வதே அவனுக்கு அளிக்கும் சுதந்திரம், நீதி, சமாதானத்தின் அடித்தளம் என்று சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தின் முன்னுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



மனித உரிமை என்பது யாராலும் உருவாக்கப்பட்டதல்ல. யாராலும் யாருக்கும் வழங்கப்பட்டதும் அல்ல. ஒவ்வொரு மனிதன் பிறக்கும்போதும் அவனுடம் பிறந்ததுதான் மனித உரிமை. அதனால், ஒருவரின் உரிமையைப் பறிக்க யாருக்கும் உரிமை இல்லை.




இன்னும் சொல்லப் போனால், ஒரு குடிமகனின் மனித உரிமையைப் பறிக்க அந்த நாட்டின் அரசுக்குக்கூட அதிகாரம் இல்லை. உலகில் பிறக்கும் ஒவ்வொரு மனிதனுக்கும் சமமான உரிமைகளும் அடிப்படை சுதந்திரமும் உள்ளது. இவற்றை உலகுக்கு உறக்கச் சொல்லும் நாள்தான் சர்வதேச மனித உரிமை நாள்.

வாழ்வுரிமை, எழுத்துரிமை, கருத்துரிமை போன்ற அடிப்படை உரிமைகளை அனைவரும் பெற்று சுதந்திரமாக வாழ வேண்டும். உயிர் வாழ்வதற்கான உரிமை, கருத்துச் சுதந்திரம், மனிதன் சுதந்திரமாக வாழ்வதற்கான கல்வி, மருத்துவம், சுகாதாரம், குடிதண்ணீர் போன்ற அடிப்படை அம்சங்கள் ஒருவன் மனிதனாக வாழ்வதற்கு உரிய அடிப்படை உரிமைகள். இவற்றையே மனித உரிமை என்று சொல்கிறோம்.

நாடு, சமூகம், பொருளாதாரம், அரசியல், நீதி ஆகியவற்றில் மனிதன் மனிதனாக வாழ்வுதற்கான உரிமை ஒவ்வொருவருக்கும் உறுதி செய்யப்பட வேண்டும். நாடு, மொழி, ஜாதி, இனம் பொருளாதாரம் போன்ற எந்தக் காரணத்தைக் காட்டியும் ஒருவனுடைய இந்த உரிமைகள் பறிக்கப்படக் கூடாது என்பதை வலியுறுத்துவதே சர்வதேச மனித உரிமை நாள். *

# தமிழ் மக்கள் மஹிந்தவை ஒருபோதுமே ஆதரிக்கார்!

## அடித்துக் கூறுகிறார் சித்தார்த்தன் எம்.பி.



மட்டக்களப்பு, டிசெ. 10

தமிழ் மக்கள் மஹிந்த ராஜபக்ஷவை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அதன் காரணமாகவே நாங்கள் ஐக்கிய தேசிய முன்னணிக்கு ஆதரவைத் தெரிவித்தோம் எனப் புளொட் அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

சிலர் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பநிலை தொடர்பாக நடுநிலை வகிக்கு மாறு கூறுகின்றபோதிலும் அவ்வாறு நடுநிலை வகிப்பதானது மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிப்பதற்குச் சமமாகவே பார்க்கப்படுகின்றது.

தமிழ் மக்கள் மஹிந்தவை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அதன் காரணமாகவே நாங்கள் ஐக்கிய தேசிய முன்னணிக்கு ஆதரவைத் தெரிவித்தோம்.

பொதுத்தேர்தல் ஒன்றை ஜனாதிபதி அறிவித்துள்ள நிலையில், மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியை கைப்பற்றினால் இன்று காணப்படும் குழப்பநிலை மேலும் அதிகரிக்கும்.

இரண்டு தேசிய கட்சிகளும் தங்களின் ஆட்சியிலேயே தேர்தல் நடத்தப்படவேண்டும் என்ற நோக்கில் செயற்படுகின்றன. இதில் சிறுபான்மையினரின் நலன்கள் தொடர்பாக அவர்கள் எதுவும் சிந்திக்கப் போவதில்லை–என்றார். (ஐ)

# சிறைக்குள் மகனுக்கு ஹெரோய்ன் வழங்க முயன்ற தந்தையார்!

## வவுனியா பொலிஸாரால் கைது

வவுனியா, டிசெ. 10

வவுனியா மத்திய சிறைச்சாலைக்குள் ஹெரோய்ன் போதைப்பொருளை மறைத்து மகனுக்குக் கொடுக்க முற்பட்ட தந்தையைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று முன் தினம் சனிக்கிழமை பிற்பகல் 1.30மணியளவில் சிறைச்சாலை அதிகாரிகளின் சோதனையின் போது இந்த நபர் கைது செய்யப்பட்டார்.

சிறையில் உள்ள மகனைப் பார்வையிட்டுப் பொருள்கள் கொடுப்பதற்காக நேற்று முன் தினம் பிற்பகல் தந்தை ஒருவர் சிறைச்சாலை வளாகத்துக்குள் சென்றுள்ளார்.

அப்போது கொண்டுசென்ற பொருள்களில் சவர்க்காரத்தை வெட்டி அதனுள் ஹெரோய்ன் போதைப்பொருளை மறைத்து வைத்து மகனுக்குக் கொடுக்க முற்பட்ட வேளையிலேயே தந்தையைக் கைதுசெய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

நெளுக்குளம் பகுதியைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் நமசிவாயம் (வயது–71) என்ற தந்தையே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவரிடமிருந்து 45 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப் பொருளை மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மகனும் ஹெரோய்ன் வைத்திருந்த குற்றச்சாட்டிலே சிறைச்சாலைக்குச் சென்றிருந்தார் எனவும் பொலிஸார் மேலும் கூறினர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார், கைது செய்யப்பட்ட சந்தேக நபரை வவுனியா நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தவுள்ளதாகத் தெரிவித்தனர். (ஐ)

# நாமல்குமாரவின் தொலைபேசித் தரவுகளை திரட்ட அதிகாரிகள் ஹொங்கொங் பயணம்

கொழும்பு, டிசெ. 10

முக்கிய பிரமுகர்கள் கொலைச்சதி தொடர்பாகத் தகவல் வெளியிட்ட ஊழல் எதிர்ப்புப் படையணியின் பிரதானி நாமல்குமாரவின் தொலைபேசியில் இருந்து அழிக்கப்பட்ட ஒலிப்பதிவுகளை மீளப் பெற்றுக்கொள்வதற்காக, அரச அதிகாரிகள் குழுவொன்று ஹொங்கொங்குக்குச் சென்றுள்ளது.

பொலிஸ் தலைமையகத்தினால் நேற்று ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் இருவர் உட்பட அரச இரசாயன பகுப்பாய்வாளர் ஒருவரும் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன் தினம் இரவு இந்த மூவரும் ஹொங்கொங் நோக்கிச் சென்றுள்ளனர் எனக் குறிப்பிடப்படுகின்றது.

நாமல் குமாரவின் தொலைபேசியுடன் கோட்டை நீதிவான் நீதிமன்றத்தின் உத்தரவையும் அவர்கள் எடுத்துச் சென்றுள்ளனர் எனப் பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்டோரைக் கொலை செய்யச் சதித்திட்டம் தீட்டப்பட்டதாகவும், அது தொடர்பான தொலைபேசி உரையாடல்கள் தம்மிடம் இருந்ததாகவும் நாமல் குமார தகவல் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# போதையில் கார் ஓட்டியவரால் 3 பேர் அநியாயமாக உயிரிழப்பு

## ஐவர் படுகாயம்; கொழும்பில் சம்பவம்



கொழும்பு, டிசெ. 10

கொழும்பு கல்கிஸை–இரத்மலானை வீதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற இரு வேறு வாகன விபத்துக்களில் 3 பேர் உயிரிழந்தனர். மேலும் 5 பேர் படுகாயமடைந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மதுபோதையில் சாரத்தியம் செய்த கார் சாரதியால் தான் இந்த விபத்துக்கள் இடம்பெற்றன என்று விசாரணைகளில் தெரியவந்தது. சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் இரத்மலானைப் பொலிஸார் தெரிவித்தனர்.

காலியிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த வாகனங்களும் எதிர்த்திசையில் பயணித்த காருமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளன.

கல்கிஸை நீதிமன்ற கட்டடத் தொகுதிக்கு அருகில் இரண்டு கார்கள் மோதுண்டு இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன் மேலும் ஒருவர் காயமடைந்தனர்.

இந்த விபத்தையடுத்துத் தப்பிச் சென்ற கார்ச்சாரதி, கல்கிஸை எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகில் மற்றொரு விபத்தை ஏற்படுத்தினார். அதில் கார் மற்றும் இரண்டு மோட்டார் சைக்கிள்களை மோதி கார்ச் சாரதி விபத்தை ஏற்படுத்தினார். இந்த விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் நால்வர் காயமடைந்தனர்.

இந்த விபத்துக்களில் உயிரிழந்தவர்களின் விவரங்களைப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

தெஹிவளையைச் சேர்ந்த மொகமட் ரிஸ்வான் (வயது–54), அதே இடத்தைச் சேர்ந்த சப்ராஸ் காதர் (வயது –21) மற்றும் அநுராதபுரத்தைச் சேர்ந்த குமார எதிரிசிங்க (வயது–18) ஆகிய மூவருமே உயிரிழந்தனர்.

விபத்துகள் தொடர்பிலான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ஐ)

# கடல் நீர் வீடுகளுக்குள் உட்புகும் அபாய நிலை!

## நானாட்டான் மக்கள் முறைப்பாடு



மன்னார், டிசெ. 10

மன்னார், நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சில கிராமங்களினுள் கழிவு நீருடன் கடல் நீரும் சேர்ந்து உட்புகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக மக்கள் தெரிவித்த முறைப்பாட்டை தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் நேற்றுக் காலை அந்தப் பகுதிக்குச் சென்று அப்பகுதி மக்களுடன் கலந்துரையாடினார்.

இதன்போது அச்சங்குளம் பகுதியில் கழிவு நீருடன் கடல் நீரும் சேர்ந்து மக்கள் குடியிருப்புப் பகுதிக்குள் வருவதாக அப்பகுதி மக்கள் நாடாளுமன்ற உறுப்பினரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதனால் நோய்த் தொற்றுக்கள் பரவுவதற்கான வாய்ப்பு உள்ளதோடு தென்னை மற்றும் பயன் தரும் மரங்களும் பாதிக்கப்படுகின்றன என்றும் அப்பகுதி மக்கள் குறிப்பிட்டனர்.

எனவே இந்த விடயம் தொடர்பாக உடனடியாக மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவினர் ஊடாகத் தீர்வைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் எனவும் அந்தக் கிராம மக்கள் கோரிக்கை விடுத்தனர். (ஐ)

# பலஸ்தீனத்துக்கு எதிரான பிரேரணையை எதிர்க்காமல் 'நைசாக' நழுவியது இலங்கை

கொழும்பு, டிசெ. 10


பலஸ்தீனத்தின் ஹமாஸ் அமைப்புக்கு எதிராக, ஐ.நா. பொதுச்சபையில் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்துக்கு எதிராக வாக்களிக்காமல் வெளியேறியது இலங்கை.

ஹமாஸ் அமைப்புக்குக் கண்டனம் தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றை ஐ.நா. பொதுச்சபையில் அமெரிக்கா கொண்டு வந்தது. இந்தத் தீர்மானம் போதிய ஆதரவு கிடைக்காததால் தோல்வியடைந்தது.

பொதுச் சபையின், 86 நாடுகள் தீர்மானத்தை ஆதரித்தன. 57 நாடுகள் எதிர்த்து வாக்களித்தன. அதேவேளை, இந்தியா, இலங்கை உள்ளிட்ட 33 நாடுகள் வாக்களிக்காமல் நடுநிலை வகித்தன.

இந்தத் தீர்மானத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் இல்லாததால் தோல்வியடைந்தது.

பலஸ்தீனத்தை நட்பு நாடு என்று இலங்கை கொண்டாடும் நிலையிலும், இந்த தீர்மானத்துக்கு எதிராக வாக்களிக்காமல் இலங்கை நழுவியுள்ளது. (ஐ)




## 2019 ஐ.பி.எல்லில் முஸ்தாபிஸுர் இல்லை!

2019 ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல். ஏலத்தில் பங்களாதேஷ் அணியின் இளம் வேகப்பந்து வீச்சாளர் முஸ்தாபிஸுர் ரஹ்மான் இணைத்துக்கொள்ளப்பட மாட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிரிக்கெட் வாரியம் அவருக்கான மறுப்பு இல்லாத சான்றிதழை வழங்க மறுத்துவிட்டமை காரணமாகவே அவர் அடுத்த வருட ஐ.பி.எல்.லில் விளையாடுவது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

அடுத்த ஆண்டு வரவிருக்கும் உலக கிண்ணத்தில் வீரர்களின் உடற்தகுதி தொடர்பில் கவனம் செலுத்திவரும் பங்களாதேஷ் கிரிக்கெட் சபை கடந்த ஜூன் மாதம் முதல் வெளிநாட்டுத் தளமான ரி-20 லீக்குகளில் பங்கேற்க செல்லும் வீரர்களுக்கு ஒரு மறுப்பு இல்லாத சான்றிதழை பெற்றுக்கொள்ள வேண்டும் என முடிவினை அறிவித்தது.

கடந்த 2016 ஆம் ஆண்டு சம்பியன் அணியான சன்ரைஸர்ஸ் ஹைதராபாத் அணிக்காக விளையாடிய அவர் 16 போட்டிகளில் 17 விக்கெட்டுகளை வீழ்த்தினார். ஆனால் 2017 ஆம் ஆண்டு ஒரேயொரு போட்டியில் மட்டுமே விளையாடியிருந்தார்.

பின்னர் இந்த ஆண்டு இறுதியில் 2019 ஐ.பி.எல். ஏலத்திற்கு மும்பை இந்தியன்ஸ் அணியால் வெளியிடப்பட்ட 10 வீரர்களில் ஒருவராகவும் முஸ்தாபிஸுர் ரஹ்மான் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பதவி விலகுவாரா சப்ராஸ் அஹமட்?

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தலைவர் பொறுப்பை இராஜினாமா செய்ய தோன்றுவதாக சப்ராஸ் அஹமட் கூறியுள்ளார்.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்ற நியூசிலாந்து அணிக்கெதிரான டெஸ்ட் தொடரை 2-1 என்ற கணக்கில் இழந்ததன் பின்னணியில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில், இதுபோல தோல்விகளை அடையும்போது அணித்தலைவர் பதவியிலிருந்து விலகத் தோன்றும். என்ன நடக்கிறது என்று பார்க்கலாம். தென்னாபிரிக்கத் தொடர் மிகவும் கடினமானது. பதவி விலகல் குறித்து முன்பே யோசித்தால் அதனால் யாருக்கும் பயனில்லை.

நான் தவறு செய்தாலோ என்னால் அணி தோற்றுப்போனாலோ பதவியிலிருந்து விலகுவது குறித்து நிச்சயம் யோசிப்பேன். என்னை விடவும் ஒருவர் டெஸ்ட் அணித்தலைவர் பதவியை வகிக்கமுடியும் என்றால் அந்த வாய்ப்பு அவருக்கு நிச்சயம் வழங்கப்படவேண்டும் என கூறினார்.

பாகிஸ்தானுக்குரிய சொந்த மண்ணான ஐக்கிய அமீரகத்தில் விளையாடிய ஏழு டெஸ்ட் போட்டிகளில் நான்கில் பாகிஸ்தான் தோல்வியடைந்துள்ளது. இதில் கடந்த மூன்று தொடர்களில் 2 தொடர்கள் தோல்வி.

கடந்த 2016ஆம் ஆண்டுக்குப் பிறகு ஆறு டெஸ்ட் போட்டிகளில் கடைசி நாளில் தோல்வியைச் சந்தித் துள்ளது பாகிஸ்தான்.

நியூஸிலாந்துக்கு வெளியே 49 வருடங்களுக்குப் பிறகு பாகிஸ்தானை டெஸ்ட் தொடரில் வென்றுள்ளது நியூஸிலாந்து அணி. இதையடுத்து சஃப்ராஸ் அஹமட் அணித்தலைவர் பதவியிலிருந்து விலகவேண்டும் எனக் குரல்கள் எழுந்துள்ளன.

## பயிற்சிப் போட்டியில் சதம் அடித்த மத்தியூஸ்




நியூசிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடிவரும் இலங்கை அணி மற்றும் நியூசிலாந்து பதினொருவர் அணிகளுக்கு இடையில் ஆரம்பமாகியுள்ள மூன்று நாட்கள் கொண்ட பயிற்சிப் போட்டியில் அஞ்சலோ மத்தியூஸ் சதம் குவித்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை வலுப்படுத்தியுள்ளார்.

நியூசிலாந்தின் நேப்பியரில் உள்ள மெக்லன் பார்க்கில் நடைபெற்ற இந்தப் பயிற்சிப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 210 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்டுகளை இழந்து ஆட்டத்தை இடைநிறுத்திக்கொண்டது.

இலங்கை அணியின் துடுப்பாட்டத்தை பொறுத்தவரை முன்னாள் அணித் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் மாத்திரம் தனித்து நின்று போராட, ஏனைய துடுப்பாட்ட வீரர்கள் மோசமான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தியிருந்தனர். ஆரம்ப துடுப்பாட்ட வீரர்கள் இருவரும் வெறும் 10 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்து ஏமாற்றினர்.

தொடர்ந்து வருகை தந்த அணித் தலைவர் தினேஷ் சந்திமால் ஓரளவு தாக்குப்பிடிக்க ஏனைய துடுப்பாட்ட வீரர்கள் முழுமையாக ஏமாற்றினர். ஒரு கட்டத்தில் இலங்கை அணி 104 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்டுகளை இழந்திருந்தது.

எனினும், தனி ஒருவராக லஹிரு குமாரவுடன் இணைந்து துடுப்பெடுத்தாடிய அஞ்சலோ மத்தியூஸ் அபாரமாக ஆடி, ஆட்டமிழக்காமல் 128 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார். இதில் மத்தியூஸ் 3 சிக்ஸ்கள் மற்றும் 19 நான்கு ஓட்டங்களை விளாசியிருந்தார். மறுபக்கம் தினேஷ் சந்திமால் 26 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார்.

குறிப்பாக இந்தப் போட்டியில், இலங்கை அணியின் தனுஷ்க குணதிலக்க, குசல் மெண்டிஸ், நிரோஷன் டிக்வெல்ல, ரொனே சில்வா மற்றும் டில்ருவான் பெரேரா ஆகியோர் ஓட்டங்களின்றி ஆட்டமிழந்திருந்தனர். பந்துவீச்சில் நியூசிலாந்து அணிசார்பில் பிளெக் கோபர்ன் 3 விக்கெட்டுகளையும், ஸ்னீடென் மற்றும் யங்கஸ்பண்ட் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

பின்னர் தங்களுடைய முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த நியூசிலாந்து பதினொருவர் அணி, நேற்றைய ஆட்ட நேர முடிவில் 67 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை இழந்துள்ளது.

அதிகபட்சமாக வில்லியம் ஓ டொன்னெல் 22 ஓட்டங்களையும், டேல் பிலிப்ஸ் 17 ஓட்டங்களையும் பெற்றுத் தந்து ஆட்டமிழந்தனர். பந்துவீச்சில் லஹிரு குமார, சுரங்க லக்மால், துஷ்மந்த சமீர மற்றும் டில்ருவான் பெரேரா ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளனர்.

## இலங்கை அணியின் களத்தடுப்பு பயிற்சியாளராக ஸ்டீவ் ரிக்ஷன்

இலங்கை கிரிக்கெட் அணியின் களத்தடுப்புப் பயிற்சியாளராக ஸ்டீவ் ரிக்ஷன், நியமிக்கப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரான ரிக்ஷன், தற்போது நியூசிலாந்து சென்றுள்ள இலங்கை அணியுடன் எதிர்வரும் 24ஆம் திகதி முதல் தனது பணிகளை தொடங்கவுள்ளார்.

அத்தோடு, ரிக்ஷன் எதிர்வரும் ஆண்டு இங்கிலாந்தில் ஆரம்பமாகவுள்ள உலகக்கிண்ணத் தொடர் வரை, அவர் தனது பணியைத் தொடருவார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இலங்கை கிரிக்கெட் அணியின் களத்தடுப்புப் பயிற்சியாளராக இருந்த, தென்னாபிரிக்காவின் நிக் போத்தாஸ், கடந்த ஏப்ரல் மாதம் தனது பதவியினை இராஜினாமாசெய்ததையடுத்து, அவருக்கு பதிலாக மனோஜ் அபேயவிக்ரம அந்த பொறுப்பினை ஏற்றுக்கொண்டார்.

இந்த நிலையில் மனோஜ் அபேயவிக்ரமவிற்கு பதிலாக தற்போது, ஸ்டீவ் ரிக்ஷன், நியமிக்கப்பட்டுள்ளார்.

ஸ்டீவ் ரிக்ஷன் இதற்கு முன்னர் பாகிஸ்தான் அணியின் களத்தடுப்பு பயிற்றுவிப்பாளராகச் செயற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கை கிரிக்கெட் நிறுவன தேர்தலை நடத்துவதில் சிக்கல்

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தேர்தலை நடத்துவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தேர்தலை அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 7ஆம் திகதி நடத்துவதற்கு இலங்கை கிரிக்கெட் தேர்தல் குழு தீர்மானித்துள்ளது.

எனினும், நாட்டில் தற்போது நிலவி வருகின்ற அரசியல் நிலைமை உள்ளிட்ட காரணங்களினால் விளையாட்டுத்துறை அமைச்சின் பதவிக்கு உயர்நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்டுள்ள இடைக்காலத் தடையின் காரணமாக இந்தத் தேர்தலை உரிய தினத்தில் நடத்த முடியாமல் போகலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த மே மாதம் 31ஆம் திகதி நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த இலங்கை கிரிக்கட்டின் தேர்தலில் முன்னாள் தலைவர் திலங்க சுமதிபால போட்டியிடுவதைத் தடுக்கும் வகையில் இடைக் கால தடை உத்தரவொன்றை வெளியிடுமாறு குறித்த தேர்தலில் தலைவர் பதவிக்காக போட்டியிடுகின்ற நிஷாந்த ரணதுங்கவினால் மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது.

இதனையடுத்து, மேன் முறையீட்டு நீதிமன்றத்தால் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதுடன், ஜூன் 14ஆம் திகதி வரை தேர்தலை ஒத்திவைக்கும்படி இடைக்கால தடை உத்தரவொன்றும் பிறப்பிக்கப்பட்டது. பின்னர் அந்த இடைக்காலத்தடை மேன் முறையீட்டு நீதிமன்றத்தினால் நீக்கப்பட்டது.

இலங்கை கிரிக்கெட் நிறுவனத் தேர்தலை அடுத்த வருடம் பெப்ரவரி மாதத்துக்குள் நடத்துமாறு சர்வதேச கிரிக்கெட் பேரவையின் நிர்வாக சபை கடந்த ஜூலை மாதம் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்துக்கு அறிவித்திருந்தது.

இதனையடுத்து இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தேர்தலை நடத்துவது தொடர்பிலான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக ஓய்வு பெற்ற முன்னாள் நீதிபதிகளைக் கொண்ட மூவரடங்கிய தேர்தல் குழுவொன்றை நியமிக்க விளையாட்டுத்துறை அமைச்சு நடவடிக்கை எடுத்திருந்தது.

இதனடிப்படையில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 7ஆம் திகதி தேர்தலை நடத்த தீர்மானிக்கப்பட்டதாக விளையாட்டுத்துறை பணிப்பாளர் நாயகம் அமிக்க முத்துகல தெரிவித்தார்.

அதற்கான வேட்பு மனுக்கள் 14ஆம், 17ஆம் திகதிகளில் ஏற்றுக் கொள்ளப்படும் என அனைத்து கிரிக்கெட் சங்கங்களுக்கும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வேட்பு மனுக்கள் தொடர்பிலான ஆட்சேபனைகள் எதிர்வரும் 31ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். அதன்பிறகு ஜனவரி முதலாம், 2ஆம் திகதிகளில் ஆட்சேபனை குறித்த விசாரணைகள் இடம்பெறும்.

இதன்படி, உரிய விசாரணைகளின் பிறகு தேர்தலில் போட்டியிட தகுதியுடைய நபர்களது விவரங்கள் உள்ளிட்ட தகவல்கள் எதிர்வரும் ஜனவரி மாதம் 21ஆம் திகதி பகிரங்கப் படுத்தப்படும்.

பின்னர் தேர்தலில் போட்டியிட தகுதிபெற்றவர்கள் ஜனவரி 14ஆம் திகதி அறிவிக்கப்பட்டு, பெப்ரவரி 7ஆம் திகதி இலங்கை கிரிக்கெட் நிறுவனத் தேர்தல் நடத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## நீதிமன்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தனிநபர் என்ற வகையில் அரசமைப்பின் ஊடாக ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள் தொடர்பில் நான் மகிழ்ச்சியடையவில்லை. வலுவான ஜனநாயக முறைமையுள்ள நாட்டில் அவ்வாறு இடம்பெறக்கூடாது. வெகுவிரைவில் இந்த நிலைமை மாற்றமடைந்து பிரதமர் மற்றும் அமைச்சரவையுடன் இணைந்து பணியாற்றுவதற்கான சந்தர்ப்பம் ஏற்படும்.

பிரதமர் மற்றும் அமைச்சரவை இன்றிச் செயற்படும் நாட்டில் ஜனாதிபதி என்ற வகையில் கடந்த சில தினங்களாக நான் மிகுந்த பொறுப்புடனும் பொறுமையுடனும் செயலாற்றி வருகின்றேன்.

தற்போது நாட்டில் நிலவும் அரசியல் நெருக்கடியை அரசியல் கட்சிகளுக்கிடையிலான பிரச்சினையாகவும் எனக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்குமிடையிலான பிரச்சினையாகவும் விவரிக்க பலரும் முயற்சித்து வருகின்றனர்.

இந்தப் பிரச்சினை சுதேச சிந்தனைக்கும் வெளிநாட்டு சிந்தனைக்குமிடையிலான மோதல் ஆகும். அந்நிய தேசசக்திகளுக்கு கீழ்படியாமல் சுயமாக எழுச்சிபெற முயலும்போது அந்நிய தேச சக்திகள் அதற்குச் சவாலாக அமைந்திருக்கின்றன.

இதனை நாட்டு மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். நாட்டை நேசிக்கும் அனைத்து மக்களும் நாட்டின் நன்மை கருதிச் சரியான முடிவுகளை எடுப்பார்கள் என நம்புகின்றேன் - என்றார்.

'எழுச்சிபெறும் பொலன்னறுவை' மாவட்ட அபிவிருத்தி செயற்திட்டத்தினூடாக 2018 ஆம் ஆண்டிற்கான வாழ்வாதார அபிவிருத்திக்கான கருவிகளை வழங்குவதற்காக பொலன்னறுவை றோயல் கல்லூரியில் இந் நிகழ்வு இடம்பெற்றது. (ஐ)

## சாவகச்சேரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்ற மாணவனே இவ்வாறு பலியானார்.

நேற்று மாலை 4.30 மணியளவில் இரணைமடுவின் 4 வான்கதவுகள் திறக்கப்பட்டிருந்தன. இதில் இடது பக்கம் இரண்டு கதவுகளும், வலது பக்கம் இரண்டு கதவுகளும் திறக்கப்பட்டிருந்த நிலையில் அந்த பகுதிக்குள் பெருமளவான பொது மக்கள் குழுமியிருந்தனர். இதில் சில இளைஞர்கள் ஆழமான பகுதிக்குள் இறங்கி குளித்துக்கொடிண்டிருந்தனர்.

இதன்போது சாவகச்சேரிப் பகுதியிலிருந்து ஐந்து பேருடன் இரணைமடுவைப் பார்க்கச் சென்றிருந்த இளைஞர் ஒருவர் குளிப்பதற்கு இறங்கியபோது நீரில் இழுத்துச் செல்லப்பட்ட நிலையில் காணாமற்போனார்.

இது தொடர்பாக உடனடியாகக் கிளிநொச்சி பிரதிப் பொலிஸ்மா அதிபர், கிளிநொச்சிப் படைத் தலைமையகம் ஆகியோருக்கு அறிவித்தபோதும் 30 நிமிடங்களுக்கு பின்னரே அங்கு பொலிஸார் மற்றும் படையினர் வருகை தந்தனர்.

இதற்கிடையே ஒரு பகுதியில் திறக்கப்பட்டிருந்த வான் கதவுகள் மூடப்பட்டு சில இளைஞர்கள் நீரில் இறங்கித் தேடுதலை மேற்கொண்டு ஒரு மணித்தியாலயத்துக்கு பின்னர் உடலை மீட்டனர்.

இரணைமடுகுளம் அபிவிருத்திக்குப் பின் கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ரணிலுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

மஹிந்தவின் அனுமதியுடனேயே ரணில் விக்கிரமசிங்க அலரிமாளிகையில் வசித்து- வருகிறார் என்று ஜே.வி.பியால் நேற்று முன்தினம் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்குப் பதிலடி கொடுக்கும் வகையிலேயே மஹிந்த மேற்படி கருத்தை வெளியிட்டார்.

கண்டி தலதாமாளிகையில் நேற்று நடைபெற்ற ஆன்மீக வழிபாட்டின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட மஹிந்த மேலும் கூறியதாவது,

நாட்டு மக்களின் நன்மை கருதி பல்வேறு புதிய வேலைத் திட்டங்களை முன்னெடுக்கத் திட்டமிட்டிருந்தேன். அவை அனைத்தும் தற்போது பொது மக்களுக்குக் கிடைக்காமல் செய்யப்பட்டுள்ளன. இதற்கு ஐக்கிய தேசியக் கட்சியே பொறுப்பு கூறவேண்டும்.

பொதுத் தேர்தலுக்குச் செல்வதே அரசியல் நெருக்கடிக்கான சிறந்த தீர்வாக அமையும். ஐக்கிய தேசியக்கட்சிக்குப் பெரும்பான்மை இல்லை. சிறுகட்சிகளின் ஒத்துழைப்பின்றிப் பெரும்பான்மையை நிரூபித்துக் காட்டட்டும் பார்ப்போம். ரணிலைப் பிரதமராக்க ஜே.வி.பி. ஒருபோதும் ஆதரவளிக்காது.

மூன்று வருடங்களாக நாட்டு மக்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சி கொடுத்த இன்னல்களும், நெருக்கடிகளும் போதும் போதுமென்றாகிவிட்டது. இதனால் மக்கள் வெறுப்படைந்துள்ளனர். பொதுத் தேர்தலை கோருகின்றனர். அதை நடத்துவதே சிறந்த தீர்வாக அமையும்.

அதேவேளை, ரணிலுக்கும், எனக்குமிடையே எவ்வித இரகசிய டீலும் இல்லை. நாடாளுமன்றத்தில் சந்தித்து பேசுவது இரகசிய நடவடிக்கையாக அமையாது. எனவே, ஜே.வி.பியின் குற்றச்சாட்டு அரசியல் நோக்கம் கொண்டது-என்றார் மஹிந்த.

## நாட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டினது அரசியல் குழப்ப நிலை தொடர்பில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-நாட்டினது அமைதியைக் குழப்பும் வகையில் சதி நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கு அதியுச்சத் தண்டனைகளைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் சட்டங்கள் உருவாக்கப்படவேண்டும்.

இதற்கான ஆணைக்குழுவொன்றை அமைக்கும் பிரேரணையொன்றை மக்கள் விடுதலை முன்னணி நாடாளுமன்றத்தில் முன்வைக்கவுள்ளது.

## ஐ.தே.க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ப்புப் போராட்டமும் யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஏற்பாட்டில் யாழ் மத்திய பஸ் நிலையத்தின் முன்பாக நேற்றுக் காலை 9.30 மணிமுதல் 10.30 மணிவரை இந்தப் போராட்டம் நடைபெற்றது.

இதன்போது 'ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கான மக்கள் தீர்ப்பாயம், எனக்குறிப்பிடப்பட்டு பொது மக்களிடம் கையெழுத்துக்களும் பெறப்பட்டன. இதனைத் தொடர்ந்து ஜனநாயகத்தைப் பாதுகாக்கவேண்டுமென வலியுறுத்தி கவனவீர்ப்புப் போராட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது 'நம்பிக்கைத் துரோகத்தின் மறு உருவம் சிறிசேன', 'மனச்சாட்சியின் அடிப்படையில் ஜனநாயகத்தைப் பாதுகாப்போம்', 'ஜனாதிபதி சிறிசேன இது எங்கள் நாடு' என்பன உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை போராட்டக்காரர்கள் தாங்கியிருந்தனர். (ஐ-07)

## பிரதமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்தது.

ஐக்கியதேசியக்கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி உறுப்பினர்களால் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை விசாரணைக்கு எடுத்த பின்னரே இவ்வாறு இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

எனவே, நீதிமன்றத் தீர்ப்புக்கு மதிப்பளிக்கும் வகையில் பிரதமருக்குரிய செயலகத்திலிருந்து மஹிந்த வெளியேறினார் என்றும், எனினும், ரணில் விக்கிரமசிங்க தற்போதும் பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான அலரி மாளிகையில் தங்கியிருக்கிறார். இது பற்றி எவரும் கண்டுகொள்வதில்லை என்றும் கூட்டு எதிரணி உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

நாட்டின் சட்டத்தை ரணில் மதிப்பாரானால் அலரி மாளிகையை விட்டு ரணில் விக்கிரமசிங்க உடன் வெளியேறவேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ஐ)

## ரி.ஐ.டியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். அதனுடன் இணைந்து அவருக்கு அமைச்சுக்கள் ஒருங்கிணைப்புப் பிரிவின் பணிப்பாளர் பதவியும் வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. அதற்குத் தேசிய பொலிஸ் ஆணைக்குழு ஒப்புதலளித்துள்ளதாக அதன் செயலாளர் சமன் திஸாநாயக்க தெரிவித்தார்.

பயங்கரவாத விசாரணைப் பிரிவின் பணிப்பாளராகப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக டி சில்வா பதவி வகித்து வந்தார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் ராஜபக்ஷாக்கள் கொலைச் சதித் திட்டத்தில் அவர் சேவை இடைநீக்கம் செய்யப்பட்டுக்கைது செய்யப்பட்டார். அவர் கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவரது இடத்துக்கே சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ. எஸ்.ஈ. ஜயசுந்தர நியமிக்கப்பட்டுள்ளார்.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.ஈ. ஜயசுந்தர, , மானிப்பாய், கோப்பாய், சுன்னாகம், சாவகச்சேரி மற்றும் ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுகளை உள்ளடக்கிய யாழ்ப்பாண பிராந்தியத்துக்கான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சராகக் கடமையாற்றினார்.

இந்த நிலையில் யாழ்ப்பாண பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக யூ.பீ.ஏ.டீ.கே.பீ. கருணாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார். அவர் பொலிஸ் உடற்பயிற்சி நிறுவனத்தின் பிரதான நிர்வாக அதிகாரியாக கடமையாற்றி வந்தார். (ஐ)

## மயிரிழையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று மாலை ஐந்து மணியளவில் இடம்பெற்றது

இரணைமடுக் குளத்தைப் பார்வையிடுவதற்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை ஏராளமான பொதுமக்கள் கூடியிருந்தனர் அவர்களுடன் சிறுவர்களும் வருகை தந்திருந்தனர்

இதன்போது சிலர் தங்களது பிள்ளைகளுடன் ஆபத்தான பகுதியான வான்பாயும் பகுதிக்குள் சென்று பார்வையிட்டனர்.

இந்த நிலையில் அந்தப் பகுதியில் இளைஞர் ஒருவர் நீரில் இழுத்துச் செல்லப்பட்ட சம்பவத்தில் பரபரப்பாக இருந்தபோது மறுபுறம் சிறுமி ஒருத்தி நீருக்குள் வீழ்ந்து தத்தளித்தபோது ஒருவரால் காப்பாற்றப்பட்டார். இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது. (ஐ)

## ஈ.பி.ஆர்.எல்.எவ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மக்கள் பேரவை நிராகரித்துள்ளது.

அந்த இரு கட்சிகளும் பேரவையில் ஏற்கனவே இருந்தமை போன்று தொடர்ந்தும் இருக்கலாமெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயங்கள் தொடர்பில் பேசிச் சுமூகமான முடிவுக்குப் பேரவை வந்துள்ளதாகவும் இதனடிப்படையில் பேரவைக்குள் இருந்த கருத்துவேறுபாடுகள் அல்லது குழப்பங்கள் நீங்குமென்றும் பேரவையின் இணைத்தலைவர்களில் ஒருவரும் முன்னாள் முதலமைச்சருமான சீ.வி.விக்கினேஸ்வரன் நம்பிக்கை வெளியிட்டார்.

தமிழ் மக்கள் பேரவையின் கூட்டம் பேரவையின் இணைத் தலைவர்களான முன்னாள் முதல மைச்சர் சீ.வி. விக்கினேஸ்வரன் மற்றும் வைத்திய கலாநிதி லக்ஸ்மன், வசந்தராசா ஆகியோர் தலைமையில் யாழ்ப்பாணம் பலாலி வீதி, கந்தர் மடம் சந்தியிலுள்ள பேரவையின் தலைமை அலுவலகத்தில் நேற்று மாலை நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தின் முடிவில் விக்கினேஸ்வரனிடம் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பேரவையின் இன்றைய (நேற்று) கூட்டத்தின்போது பல விடயங்கள் தொடர்பாகப் பேசப்பட்டன. அதிலும் பேரவையில் இருந்து சில கட்சிகளை வெளியேற்ற வேண்டுமென ஒரு கட்சி விடுத்த கோரிக்கை தொடர்பிலும் ஆராயப்பட்டிருந்தது. இது தொடர்பில் ஆராய்ந்து ஒரு சுமூகமான முடிவுக்கு நாங்கள் வந்துள்ளோம். இதனடிப்படையில் பேரவைக்குள் இருந்த கருத்து வேறுபாடுகள் இத்துடன் நீங்குமென்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

இதுவரை எழுத்து மூலமாகப் பேரவைக்கு என்று எதுவுமே நாங்கள் வைத்திருக்காதபடியால் இவற்றில் எந்தவிதமான விடயங்கள் எங்களுக்கு முரண்பாடுகளை அல்லது பிரச்சினைகளை ஏற்படுத்துமென்ற முறையில் ஆராய்ந்து அவற்றை நாங்கள் அடையாளப்படுத்தி அடுத்த கூட்டத்துக்கிடையில் ஆவணப்படுத்த இருக்கிறோம்.

ஏனெனில் பேரவையில் இருந்து இரண்டு கட்சிகளை வெளியேற்றவேண்டுமென ஒரு கட்சி கோரியிருந்த நிலையில் அந்த இரு கட்சிகளிடம் விளக்கமும் கோரப்பட்டிருந்தது. அதனடிப்படையில் இது சம்மந்தமாக இருதரப்பாரும் தங்களுடைய விளக்கத்தை அறியத் தந்ததால் அதனை ஏற்றுக் கொள்வதென ஒரு முடிவுக்கு நாங்கள் வந்திருக்கின்றோம்.

இந்தக் கூட்டத்தில் புளொட் அமைப்பின் பிரதிநிதி ஒருவர் வந்திருந்தார். அந்த அமைப்பின் பிரதிநிதிகள் கடந்த கூட்டத்திற்கு வந்தபோது அவர்களை வெளியேற்றியது தவறு என்பதனையும் நாங்கள் அவர்களுக்குத் தெரியப்படுத்தியிருக்கின்றோம். ஆகவே கூட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட சுமூகமான முடிவின் பிரகாரம் தொடர்ந்தும் புளொட் மற்றும் ஈபிஆர்எல்எப் கட்சிகள் பேரவைக்கு வரலாம் அல்லது பேரவையில் இருக்கலாம்-என்றார். (ஐமே07)

## ஐ.தே.கவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராஜபக்ஷ தலைமையில் மீண்டும் புதிய அரசை அமைப்பதற்கான மாற்று ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு, நாடாளுமன்றக் கலைப்புக்குச் சாதகமாக வந்தால், அடுத்த பொதுத்தேர்தல் வரை மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராகக் கொண்ட புதிய இடைக்கால அரசு ஒன்றை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமிப்பார் என்று கூறப்படுகின்றது.

அதேவேளை, வர்த்தமானி அறிவிப்புக்கு எதிராக உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தால், அடுத்த ஒன்றரை ஆண்டுகளுக்கு, அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய அரசு ஒன்றை அமைப்பது குறித்தும் பல்வேறு மட்டங்களிலும் ஆலோசனைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த வாரம், மஹிந்த மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட கட்சிகளுடனும் ஆலோசனைகளை நடத்தியிருந்தார்.

அதேவேளை மஹிந்தவும் கடந்த சில நாட்களாக, எதிர்த்தரப்பைச் சேர்ந்த பலருடனும் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

உயர்நீதிமன்றத் தீர்ப்புக்குப் பின்னர் ஏதாவது ஓர் அரசை அமைத்து, தற்போதைய அரசியல் நெருக்கடியைத் தீர்க்க வேண்டிய நிலையில் ஜனாதிபதி இருக்கின்றார்.

இடைக்கால அரசை அல்லது, அனைத்துக் கட்சி அரசை அமைத்து இந்த நெருக்கடியைத் தீர்ப்பதிலேயே அவர் கவனம் செலுத்தி வருகின்றார் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உயர்நீதிமன்றத் தீர்ப்பு தமக்குச் சாதகமாக வந்தால், ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக நியமிப்பதற்கு அழுத்தங்களைக் கொடுப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தயாராகிவரும் நிலையிலேயே, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதற்கு மாற்றான திட்டங்களை ஆலோசித்து வருகின்றார் எனக் கூறப்படுகின்றது. (ஐ)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சர் நிர்மலா சீத்தாராமன், அமெரிக்காவுக்கு உத்தியோகபூர்வப் பயணத்தை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது, அவர் இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பாக அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் ஜேம்ஸ் மாட்டிஸ் உள்ளிட்ட உயர்மட்டத் தலைவர்கள் மற்றும் அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியிருந்தார்.

இந்தச் சந்திப்புகளின்போது, இந்தோ - பசுபிக் பிராந்தியத்தின் தற்போதைய நிலவரம் தொடர்பாக முக்கிய கவனம் செலுத்தி ஆராயப்பட்டது.

குறிப்பாக, இலங்கையின் அண்மைய நிலவரங்கள் குறித்து இந்தச் சந்திப்பின்போது, முக்கியமாக -விரிவாக கலந்துரையாடப்பட்டது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

அத்துடன், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், மாலைதீவு ஆகிய நாடுகள் தொடர்பாகவும் அமெரிக்க - இந்தியத் தரப்புகள் பேச்சுக்களை நடத்தியுள்ளன. (ஐ)

# மைத்திரி பொறுப்பற்ற செயல்களால் எல்லை மீறும் அரசியல் குழப்பங்கள்!

## புத்திஜீவிகள் கடும் எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 10

இலங்கையில் தற்போது ஏற்பட்டிருக்கும் அரசியல் குழப்பங்கள், எல்லை மீறிச் செல்வதாகப் புத்திஜீவிகள் எச்சரித்துள்ளனர்.

ஜனாதிபதி பொறுப்பற்ற வகையில் எரிமலை மீது நடந்து செல்வதாகவும், விரைவில் அது வெடித்து முழு நாடும் பெரும் பாதிப்பை எதிர்கொள்ள நேரிடவுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் மஹிந்தவின் பிரதமர் பதவி மற்றும் அமைச்சரவை நடவடிக்கைகள் தடை செய்யப்பட்டுள் ளன. இந்த தடை உத்தரவு காரணமாக அடுத்த ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தைச் சமர்ப்பித்து நிறைவேற்றுவதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் கூட்டு நிதியில் இருந்து அரச செலவினங்களும் பணம் பயன்படுத்தப்பட வேண்டும். அரசமைப்பின் 152 ஆம் சரத்திற்கமைய அரச செலவுகளைச் செய்வதற்கான யோசனை அமைச்சரவையில் சமர்ப்பித்து நாடாளுமன்றத்தில் அனுமதி பெற வேண்டும்.

அமைச்சரவை இல்லை என்றாலும் நாட்டின் செயற்பாடுகள் உரிய முறையில் இடம்பெறுவதாக ஜனாதிபதி கூறி வருகின்றார். எனினும் அவர் எரிமலை மீது நடந்து கொண்டிருக்கின்றார் என்பதை அவருக்கு நெருக்கமான ஆலோசகர்கள் அறிவுறுத்த வில்லை என்பதை தற்போதைய நடவடிக்கைகள் புலப்படுத்துகின்றன.

ஜனவரி மாதம் இந்த எரிமலை வெடிக்கும் எனவும், அவ்வாறு வெடித்தால் அது ஜனாதிபதிக்கு மாத்திரமின்றி முழு இலங்கைக்குமே பாதிப்பை ஏற்படுத்தும் எனக் கூறப்படுகின்றது.

சிலர், கூட்டு நிதியை ஜனாதிபதியினால் பயன்படுத்துவதற்கு வாய்ப்புகள் உள்ளதாகக் கூறுகின்ற போதிலும் அரசமைப்புக்கமைய அது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஜனாதிபதிக்குத் தான் நினைத்தபோது கூட்டு நிதியில் இருந்து பணம் செலவிடும் அதிகாரம் இல்லை. அவருக்குச் சில செலவுகளை ஏற்பதற்கு 2 சந்தர்ப்பங்களில் மாத்திரமே முடியும்.

அது நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட சந்தர்ப்பத்திலும், இதற்கு மேலதிகமாக 151ஆம் சரத்திற்கமைய அவசர நிலைமைகளில் மாத்திரமே பயன்படுத்த முடியும். எனினும் அந்த நடவடிக்கை நிதி அமைச்சரினால் மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும் அவசர நிலைமை ஒன்று நாட்டில் இல்லை.

இதுவரை அமைச்சரவையின் நடவடிக்கைகள் நீதிமன்றத்தினால் தடை செய்யப்பட்டுள்ளன. அதற்கமைய டிசெம்பர் மாதம் இறுதிக்கு முன்னர் ஜனாதிபதியினால் அமைச்சரவை ஒன்று நியமிக்கவேண்டியது கட்டாயமாகும்.

அப்படிச் செய்யவில்லை என்றால் அரச ஊழியர்களின் சம்பளத்துக்கும் அரசின் அனைத்துச் செலவுகளுக்கும் நிதி ஒதுக்கும் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்றால் ஜனாதிபதியின் உணவிற்கேனும் செலவிடுவதற்கு அரசில் பணம் பெற முடியாமல் போய்விடும்.

இந்த நடவடிக்கை நீடித்தால் இது நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முழு நாட்டைப் பாரிய ஆபத்தில் கொண்டு போய்விடும் எனப் புத்திஜீவிகளை மேற்கோள் காட்டிக் கொழும்பு ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

(ஜ)

# தீர்ப்புக்காகக் காத்திருக்கும் சர்வதேச நிதி நிறுவனங்கள்!

## சீனாவும் கைவிரிப்பு

கொழும்பு, டிசெ. 10

அரசியல் நெருக்கடிகளால், இலங்கைக்குக் கடன் வழங்க இணங்கிய பல சர்வதேச நிதி நிறுவனங்கள், தமது முடிவுகளை இடைநிறுத்தி வைத்துள்ளதாகத் தகவல்கள். வெளியாகியுள்ளன.

தற்போதைய அரசியல் இழுபறிகளால், சட்ட ரீதியான அரசு தொடர்பான கேள்விகள் எழுந்துள்ளன.

இதனால் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு வெளியாகும் வரை, தமது கடன்கள் தொடர்பான முடிவுகளை எடுப்பதைச் சர்வதேச நிதி நிறுவனங்கள் நிறுத்தி வைத்துள்ளன.

இலங்கை அரசு எதிர்வரும் ஜனவரி தொடக்கம் ஏப்ரல் மாதத்துக்கிடையில், 1.5 பில்லியன் டொலர் கடனைத் திருப்பிச் செலுத்தவேண்டிய நிலையில் உள்ளது.

இதில் ஒரு பில்லியன் டொலர் வரும் ஜனவரி 15ஆம் திகதி செலுத்தப்பட வேண்டும். இதற்காக, சீன அபிவிருத்தி வங்கியிடம் 500 மில்லியன் டொலரைக் கடனாகப் பெறுவதற்கான பேச்சுக்கள் நடத்தப்பட்டிருந்தன.

ஆனால், அரசின் சட்டபூர்வதன்மை தொடர்பான இழுபறியினால், இந்தக் கடனை சீன அபிவிருத்தி வங்கி நிறுத்தி வைத்துள்ளது. ஏற்கனவே சீன அபிவிருத்தி வங்கியிடம் இலங்கை அரசு ஒரு பில்லியன் டொலரை கடனாகப் பெற்றுள்ளது.

சீனாவிடம் கடனைப் பெறுவதற்குப் பேச்சு நடத்தினோம். ஆனால், இலங்கையின் நாடாளுமன்றக் கலைப்புக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கின் தீர்ப்புக்காக காத்திருக்கின்றோம் என்று



சீனா அரசதரப்பினர் தெரிவித்துள்ளனர் என்று இலங்கை அதிகாரி ஒருவர் கூறினார்.

நீதிமன்றத் தீர்ப்பு வரும் வரை, யாரும் எங்களுக்குக் கடன் கொடுக்கப் போவதில்லை. அவர்கள் அரசியல் சூழ்நிலை தெளிவாக உள்ளதா என்பதை அவர்கள் பார்க்க விரும்புகின்றார்கள்.

நாங்கள் உங்களுக்குக் கடன் கொடுக்கமாட்டோம் என்று நாங்கள் கூறவில்லை. ஆனால், நாங்கள் முதலில் தெளிவுபடுத்த விரும்புகின்றோம் என அவர்கள் சொல்கிறார்கள் என்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அரசியல் நெருக்கடிகளினால் சர்வதேச நாணய நிதியமும், அடுத்த கடன் தவணைக்கான பேச்சுக்களை இடைநிறுத்தி வைத்துள்ளது.

2016இல், சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு 1.5 பில்லியன் டொலர் கடனை மூன்று ஆண்டுகளில் கட்டம் கட்டமாக வழங்க இணங்கியிருந்தது.

அதில் 1 பில்லியன் டொலர் இன்னமும் வழங்கப்படாத நிலையில், தெளிவான அரசு அமைக்கப்படும் வரை காத்திருப்பதாக சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது.

(ஜ)

# 5 அமைச்சுச் செயலர்களிடம் விசாரணை நடத்தவேண்டும்

## ஐக்கிய தேசிய முன்னணி சபாநாயகருக்கு மனு



கொழும்பு, டிசெ. 10

நிதியைத் தவறாகப் பயன்படுத்தினர் எனத் தெரிவித்து 5 அமைச்சுக்களின் செயலாளர்கள் விசாரணைக்குட்படுத்தவேண்டும் என ஐக்கிய தேசிய முன்னணியினர் பிரேரணை ஒன்றைச் சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் வழங்கியுள்ளனர்.

அத்தோடு நாடாளுமன்றத்தின் செயலாளர் நாயகத்துக்கும் இந்தப் பிரேரணை கையளிக்கப்பட்டுள்ளதாக நேற்று அலரிமாளிகையில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

அதில் இந்த 5 அமைச்சுக்களின் செயலாளர்களும் நாடாளுமன்றக் குழுவுக்கு (நாடாளுமன்ற உத்தரவாதங்கள் குழு, நிதிக்குழு, பொதுக்கணக்காய்வு குழு) முன்பாக விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றில் பிரதமர் மற்றும் அனைத்து அமைச்சு அலுவலகங்களுக்குமான நிதியை இரத்துச் செய்யும் ஒரு தீர்மானத்தை நாடாளுமன்றம் நிறைவேற்றிய பின்னர் அமைச்சுக்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதிகள் தவறாகப் பயன்படுத்தப்பட்டனவா என்பது தொடர்பில் விசாரிக்கவேண்டும் எனப் பாட்டாளி சம்பிக்க ரணவக்க கோரியுள்ளார்.

முறைகேடுகள் இடம்பெற்றிருந்தால் நாடாளுமன்றக் குழுக்கள் அவற்றை கேள்விக்கு உட்படுத்துவதற்குச் சட்ட அதிகாரம் கொண்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

(ஜ)

# ரணிலுக்கு ஆதரவான தீர்மானம் ஜனாதிபதியிடம் வழங்கப்படும்



கொழும்பு, டிசெ. 10

ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக எதிர்வரும் 12 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் தீர்மானத்தை ஜனாதிபதியிடம் கையளிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் துஷார இந்துனில் இதனைத் தெரிவித்தார்.

இதற்கான அனைத்து நடவடிக்கைகளும் தற்போது தயார் நிலையில் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (ஜ)

# மனித உரிமையை வலியுறுத்தி கிளிநொச்சியில் போராட்டம்

கிளிநொச்சி, டிசெ. 10

மனித உரிமை தினத்தை முன்னிட்டுக் கிளிநொச்சி மாவட்ட வர்த்தக தொழில் பொதுத் தொழிலாளர் சங்கத்தினரால் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

நேற்றுக் காலை இந்தப் போராட்டம் நடந்தது.

'தொழில் புரியும் இடங்களில் ஊழியர்கள் மீதான வன்முறையை நிறுத்து' எனும் தொனிப்பொருளில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் உரிமைகள், பெண்கள் மீதான வன்முறை, வேலை நேரம் மற்றும் விடுமுறை நாட்களில் தொழிலாளர்களிடம் வேலை வாங்குதல் உள்ளிட்ட விடயங்களை முன்னிறுத்தி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த ஆர்ப்பாட்டக்காரர்கள், கிளிநொச்சியில் தொழிலாளர்கள் தொழில் புரியும் இடங்களில் அவர்களுக்கு உரிய சம்பளம் வழங்கப்படுவதில்லை. அவர்கள் அதிக நேரம் வேலை வாங்கப்படுகின்றனர்.

தொழில் உரிமையை மீறும் வகையில் தொழில் வழங்குநர்கள் செயற்படுகின்றனர். பத்து மணிநேரம், பன்னிரெண்டு மணிநேரம் எனப் பல்வேறு தொழில் வழங்குநர்கள் தொழிலாளர்களை வருத்துகின்றனர். இதனால் எதிர்காலத்தில் எமது மாவட்டத்தில் பல்வேறு நோய்த்தாக்கங்கள் ஏற்படும் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. சில தொழில் வழங்குநர்கள் பெண்களைத் தொந்தரவு செய்கின்றனர் என்றனர்.

(ஜ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.12.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.